
# தமிழரசு

16.11.1995 ரூ.





திருமதி பார்வதி ரவி கண்டசாலா - நாட்டிய நாடகம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !

# நிகழ்ச்சிகளில் சில...

செல்வி ரீலா ஹோட்டா - நாட்டியம்



# இந்த இதழில்...

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள்
தேசியவுடைமை .............................................. 2
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
படைப்புகள் நாட்டுடைமை ........................ 5
கூட்டுறவுத்துறையின் மகத்தான
சாதனைகள்
- மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு கா.ப. பட்டாபிராமன்........................... 7
தமிழ்நாட்டில் பனைத்தொழில் ................ 12
புரட்சித்தலைவியின் தலைமையில்
இணைந்து நிற்போம்!
- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு கு.ப. கிருஷ்ணன் .............................. 18
பூவைத் தாங்கும் இதயம்
- டாக்டர் மு. தனபால் ................................ 21
ஒப்புயர்வற்ற இசை வடிவம் படைத்த
சீர்காழித் தமிழிசை மூவர் ........................ 24
டான்பெட் - உழவர்க்கு ஒரு சேவை
நிறுவனம்..................................................... 32
மீன்வள மேம்பாடு ....................................... 36
நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம்பிள்ளை
பேராசிரியர் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி......... 39
குடும்பத்திற்கு ஒரு வீடு! ............................ 42
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்
வாரியத்தின் கீழ் இயங்கும்
தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .............. 46

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)

அறம் சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தை யும் அளிக்கும்; ஆகையால், உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையான வேறு யாது?

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஐப்பசித் திங்கள் : 30

மலர்: 26 இதழ்: 10

16.11.1995

விலை ரூபாய் : 3



மக்கள் சமுகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை, கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும்.

பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்க வேண்டும்.

—தந்தை பெரியார்



கூட்டுறவுச் சங்கத்தில் குடும்பத்துக்கு ஒருவர் வீதமாவது அங்கத்தினராய்ச் சேர வேண்டும். இந்த வகையிலும் இயக்கம் வளர்ந்தோங்கப் பாடுபட வேணுமாய் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். சமுதாயத்தில் தனி உடைமைக்கும், பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாகக் கூட்டுறவியக்கம் உருவாகியுள்ளது.

சமூக அமைதிக்கும் பொருளாதார நீதிக்கும் பயன்படும் கூட்டுறவு நமது நாட்டில் நன்கு பரவ வேண்டும், அதன் முழுப் பயனையும் அனைவரும் அடைய வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா



# பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் தேசியவுடைமை:

## மாண்புமிகு முதல்வர் பரிவுத் தொகையாக ரூ 75 இலட்சம் வழங்கினார்

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களையும், படைப்புகளையும் தேசியவுடைமையாக்கி, அதன்மூலம் அவரது எண்ணங்களும் கருத்துக்களும் விரைவில் பரவுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கருத்து தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களைத் தேசியவுடைமை யாக்குவதற்காக வழங்கப்பட வேண்டிய பரிவுத் தொகையை நிர்ணயம் செய்ய ஒரு வல்லுநர் குழு அமைத்து ஆணையிட்டார். அந்தக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களைத் தேசிய உடைமையாக்கி, அதற்கான பரிவுத் தொகையை (Consideration Amount for Nationalisation of the Works of Perarignar Anna) 75 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்து

## எது அழகு?

அழகு அழிந்து போகலாம். ஆனால், உங்களது ஒழுக்கம் அழியாமல் நிலைத்து நின்று உங்களை அழகு படுத்தும்

—ஓவிட்

## சிக்கனத்தின் சிறப்பு.

சிக்கனத்தை உணர்ந்து செயல்படுத்து கிறவன், அபார வலிமையையும், வெற்றியையும் அடைகிறான்.

—ஜேம்ஸ் ஆலன்

● நான்காம் ஆட்டை சொல்லும் செய்தி:

ஆணையிட்டதோடு, அந்தப் பரிவுத் தொகை, திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களிடம் நேரில் வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

2.11.1995 அன்று, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவரது துணைவியார் திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களை, நேரில் சந்தித்து, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் எல்லா மக்களுக்கும் சென்றடைவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விளக்கி, அவரது எழுத்தோவியங்களைத் தேசிவுடைமை ஆக்கியதற்கான பரிவுத் தொகையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைப் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வளர்ப்பு மகன்களும், அவர்தம் துணைவியரும் வீட்டு வாசலில் நின்று வரவேற்றார்கள். பின்னர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் குடும்பத்தாரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறிது நேரம் அளவளாவினார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர், மாண்புமிகு உணவு அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் ஆகியோரை பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அந்த இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தின் முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நின்று வணங்கி, தனது மரியாதையைச் செலுத்தினார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வளர்ப்பு மகன்கள் டாக்டர் சி.என்.ஏ. பரிமளம், அவரது துணைவியார் திருமதி. சரோஜா, திரு. சி.என்.ஏ. இளங்கோவன் மற்றும் திருமதி. விஜயா, திரு. சி.என்.ஏ. கௌதமன் மற்றும் திருமதி துளசி, திரு. சி.என்.ஏ. ராஜேந்திரன் மற்றும் திருமதி. சாந்தா ஆகியோரும், அவர்களது மகன்களும் மகள்களும் இந்த நிகழ்ச்சியின்போது உடன் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திருமதி. ராணி அண்ணாதுரை அவர்கள் உடல்நலம் குறித்து விசாரித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பின்னர், அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

### அலோபதி மாணவர்களுக்கு இணையாக

# சித்த மருத்துவக் கல்விக்கு பயிற்சி உதவித்தொகை உயர்வு

## –மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு

**பா**ளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில், பயிலுகின்ற முதுகலை மருத்துவப் பட்டதாரி மாணவர்கள் சங்கம், சித்த மருத்துவத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் தங்களுக்கும், அலோபதி பிரிவில் முதுகலைப் பட்டப் படிப்புப் பயில்கின்ற மாணவர்களுக்கு இணையாகப் பயிற்சி உதவித் தொகை (Stipend) வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தது.


சித்த மருத்துவப் படிப்புப் பயில்கின்ற மாணவர்களுக்கும், அலோபதி மருத்துவப் படிப்புப் பயிலுகின்ற முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழங்குவதைப் போன்றே இணையாகப் பயிற்சி உதவித்தொகை (Stipend) வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை வழங்கியிருந்தார். அதன்படி:

அ. முதுகலை மருத்துவப் பட்டப் படிப்புப் பயிலும் அரசுப் பணியில் இல்லாத மாணவ மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

ஆ. அரசுப் பணியில் உள்ள, சித்த மருத்துவ முதுகலைப் பட்டப் படிப்புப் பயிலும் மாணவ மாணவிகளுக்குப் பாதி சம்பளம் மற்றும் 72 சதவிகிதம் அகவிலைப் படி அடங்கிய உதவித்தொகை வழங்கப்படும்.

இ. அலோபதி மருத்துவப் பட்டப்படிப்புப் பயில்கிற மாணவர்களுக்கு வழங்கப் படுவதைப் போன்றே, மாதம் ஒன்றுக்குப் பயிற்சி உதவித்தொகையாக (Stipend) 1,550 ரூபாய், சென்னை, பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரிகள், திருமங்கலம், அரசு ஹோமியோபதி கல்லூரி, சென்னை,. அரசு யுனானி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ள ஆணையின் வாயிலாக, பல்வேறு மருத்துவப் படிப்புகளைப் பயில்கின்ற மாணவர்களுக்கு உதவித்தொகை (Stipend) வழங்கப்படுவதில் உள்ள வேறுபாடு (anomaly) முற்றிலும் களையப்பட்டுச் சித்த மருத்துவம், ஹோமியோபதி, யுனானி போன்ற இந்திய மருத்துவப் படிப்புப் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கும் உதவித்தொகை முதன் முறையாக உயர்த்தி வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் படைப்புகள் நாட்டுடைமை

# மாண்புமிகு முதல்வர் ரூ.10 இலட்சம் பரிவுத் தொகை வழங்கினார்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டைப் பகுதியில் பிறந்து, சீரிய இலக்கியப் பணியாற்றி, தனது பாடல்கள் மூலம் தமிழக மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களது எழுத்தோவியங்களையும், பாடல்களையும் அரசுடைமையாக்க வேண்டும் என்று அவரது துணைவியார் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு கோரிக்கை அனுப்பிவைத்தார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களது எழுச்சிமிகு படைப்புகளை நாட்டுடைமையாக்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், அவர்களது எழுத்தோவியங்கள் அரசுடைமை யாக்கியதற்காக, பரிவுத் தொகையாக (Consideration Amount) ரூ.10 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் துணைவியார் திருமதி கௌரவம்மாள் அவர்களை நேரில் அழைத்து பரிவுத்தொகை ரூ.10 இலட்சத்தை வழங்கினார். திருமதி கௌரவம்மாள் அவர்களுக்கு ரூ.5 இலட்சமும், அவரது மகள் திரு குமாரவேலு அவர்களுக்கு ரூ.5 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.10 இலட்சம் காசோலைகளாக நேரில் வழங்கினார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடைய துணைவியாரும், மகனும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் தங்களது குடும்பத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள். பல காலமாக எவராலும் கவனிக்கப்படாமல் இருந்த தங்களது கோரிக்கையினை ஏற்று, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை நாட்டுடைமை யாக்கி, அவரத் குடும்பம் தழைக்க ரூ.10 இலட்சம் பரிவுத்தொகை வழங்கியதற்குத் தாங்கள் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று தெரிவித்துக் கொண்டார்கள்.

திரு குமாரவேலு அவர்கள் தற்போது தமிழக அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் உதவி மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி வருகின்றார்.

# ‘பூம்புகார்’ கைவினைப் பொருள்கள்

‘பூம்புகார்’ எனும் சிறப்புப் பெயரோடு தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 1.8.1973 அன்று தொடங்கப்பட்டு ஒரு அரசு நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அவர்களது தயாரிப்புகளை விற்பனை செய்ய உதவுதல், இக்கழகத்தின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்றவற்றை இந்நிறுவனம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்கழகம், தமிழ்நாட்டின் முக்கிய இடங்களிலும் மற்றும் புதுடெல்லி, பெங்களூர், கல்கத்தா, திருப்பதி போன்ற இடங்களிலுமாக 19 விற்பனை நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு உள்ளது. மேலும், கலைப் பொருட்களை உற்பத்தி செய்ய 10 உற்பத்தி நிலையங்களையும் பெற்றுள்ளது.

நாச்சியார்கோவில், மதுரை, வாகைகுளம், ஆயக்குடி ஆகிய இடங்களில் பித்தளை விளக்குகள் மற்றும் கலைப் பொருட்கள், நாச்சியார்கோவில் மற்றும் சுவாமிமலையில் பஞ்சலோக விக்ரகங்கள், கள்ளக்குறிச்சியில் சந்தன மர மற்றும் நாட்டு மரச் சிற்பங்கள், மாமல்லபுரத்தில் கற்சிற்பங்கள், தஞ்சாவூரில் கலைத்தட்டுகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

இக்கழகம் தனது 19 விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதோடல்லாமல், நாட்டில் பல இடங்களிலும் கண்காட்சிகள் நடத்தி கைவினைப் பொருட்களை அனைவரிடையேயும் பிரபலப்படுத்தி வருகிறது. சீரான முறையில் கண்காட்சிகளை நடத்துவதோடல்லாமல், பல சிறப்புமிக்க கண்காட்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வழியில்,



ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைத் தீபத்தை முன்னிட்டு அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் “விளக்குகளின் திருவிழா” என்ற பெயரில் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கண்காட்சியில் பாரம் பரியமான பித்தளை விளக்குகள், 2 1/2 அடி முதல் 6 அடி உயர அடிக் கிளை விளக்குகள் 8 1/2 முதல் 6 வரை உயரமுள்ள பாரம்பரிய மிக்க அன்னத்துடன் கூடிய குத்து விளக்குகள், அன்னம், சங்கு சக்கரம், கணபதி, தேவி முதலியவற்றைக் கொண்ட தொங்கு விளக்குகள், பல அளவுகளில் மலபார் விளக்குகள், படி விளக்குகள், வாசமாலை, அகல் விளக்கு, சுடர் விளக்கு, பாலாடை விளக்கு போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ள விளக்குகளில் சில வகைகளாகும்.

### மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் நான்காண்டுப் பொற்கால ஆட்சியில்...

# கூட்டுறவுத்துறையில் மகத்தான சாதனைகள்

### மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கா.ப. பட்டாபிராமன்

அகில இந்தியக் கூட்டுறவு வார விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில், கடந்த நான்காண்டுகளில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தகுந்த வழிகாட்டுதலோடு கூட்டுறவுத் துறை பல பொற்காலச் சாதனை களைப் படைத்துள்ளது. மேலும் சாதனைகள் தொடருகின்றன.

தமிழகத்திலுள்ள விவசாயி களுக்குக் கடந்த நான்காண்டு களில்-

குறுகிய காலக் கடன் ரூ.1954.78 கோடி.

மத்தியக் காலக் கடன் ரூ.224.90 கோடி.

நீண்ட காலக் கடன் ரூ.401.34 கோடி.

நகைக் கடன் ரூ.6050.37 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

1995-96-இல் குறுகிய காலக் கடன் ரூ.560.00 கோடி-

மத்தியக் காலக் கடன் ரூ.60.00 கோடி.

நீண்ட காலக் கடன் ரூ.170.00 கோடி.

நகைக் கடன் ரூ.1645.00 கோடி வழங்கக் குறியீடு நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுகாறும் நடப்பாண்டில் (செப்டம்பர் 95 வரையில்) குறுகிய காலக் கடன் ரூ.334.12 கோடியும், மத்தியக் காலக் கடன் ரூ.19.70 கோடியும், நீண்டகாலக் கடன் ரூ.32.70 கோடியும், நகைக்கடன் ரூ.957.89 கோடியும், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராக் கடன் ரூ.30.25 கோடியும், இரசாயன உரங்கள் ரூ.120.68 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண் விளைபொருட் கள் விற்பனை ரூ.363.15 கோடியும், சிறப்பங்காடிகளின் மூலம் நுகர்பொருள் சில்லறை விற்பனை ரூ.743.70 கோடியும் நடைபெற்று இருக்கின்றது.

குறுகிய மத்தியக் காலக் கடன்கள் வழங்கியதில் நலி வடைந்த பிரிவினர் 65.6 சதவிகிதம் பயனடைந்து இருக் கிறார்கள்.

இதன்மூலம் குறுகிய காலக் கடன் 4,71,000 பேருக்கும், மத்தியக் காலக்கடன் 26,000 பேருக்கும், நீண்ட காலக்கடன் 3,306 பேருக்கும், நகைக்கடன் 13,36,000 பேருக்கும் சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவுக் கடன்கள் 21,957 பேருக்கும், நலிந்த பிரிவினருக்குக் குறுகிய கால, மத்தியக் கால வேளாண்மைக் கடன்கள் 3,61,000 பேருக்கும் வழங்கப்

பட்டிருக்கின்றது.

விவசாயிகளுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்கு 3.00 இலட்சம் பேருக்குப் பச்சை வண்ண அட்டைகள் வழங்கி ரூ.586.87 கோடி கடன் வழங்கப் பட்டிருக்கிறது. நடப்பு நிதி ஆண்டில் மேலும் கூடுதலாக 20 சதவிகித அளவிற்குப் பச்சை வண்ண அட்டைகள் வழங்கிக் கடன் வழங்கப்பட இருக்கிறது. வாழ்வில் நலிவுற்றவர்களுக்கு குறுகிய, மத்தியக் காலக்கடன் ரூ.1439.96 கோடி வழங்கப் பட்டது.

1995-96-இல் நலிந்த பிரிவினருக்கு 70 சதவிகித அளவிற்குக் கடன் வழங்கப்பட இருக்கிறது.

### ஆதிதிராவிடர்களுக்குக் கடன் வசதி

ஆதிதிராவிடர்க்ளுக்குக் குறுகிய, மத்தியக் காலக் கடன்கள் ரூ.248.99 கோடி வழங்கப்பட்டது. நீண்ட காலக் கடன் ரூ.19.12 கோடி வழங்கப் பட்டது.

1995-96-இல் 16,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.250 வீதம் வட்டியில்லாக் கடன் வழங்கப்பட இருக்கிறது. இதற்காக ரூ.40 இலட்சம் நிதி அனுமதிக்கப் பட்டுள்ளது.

நகரக் கூட்டுறவு வங்கிகளில் கூடுதலாகப் பங்குத் தொகை செலுத்த 4,000 பேருக்கு வட்டியில்லாக் கடனாகத் தனி நபருக்கு ரூ.500 வீதம் வழங்க ரூ.20 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

**வறுமையைவிட, அறியாமையே அதிகத் துன்பத்தைத் தரும்.**

**—பர்மியப் பழமொழி**

### சிறு வியாபாரங்களுக்குக் கடன் வசதி

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ரூ.2.98 கோடி கடன் வழங்கப் பட்டிருக்கிறது. இதன்மூலம் 1.02 இலட்சம் பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். இதில் 50,000 மகளிருக்கு ரூ.8.27 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு முதல் இக்கடன் ரூ.750 லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

### மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி சிறு தொழில் கடன்

இத்திட்டத்தின் கீழ், 5,67,103 பேருக்கு ரூ.260.18 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 50 சதவிகிதம் மகளிர் பயன் பெற்றிருக்கிறார்கள். நடப்பாண்டில் இக்கடன் ரூ.750-லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 2 இலட்சம் பேருக்கு இவ்வகைக் கடன் வழங்கப்படும்.

### நகரக் கூட்டுறவு வங்கிகளின் சாதனைகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.2270.81 கோடி பல்வகைக் கடன்களும், ரூ.1637.26 கோடி நகைக்கடனும் வழங்கப் பட்டுள்ளது.

### நிலவளக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன் வழங்கும் திட்டம்

1994-95-ஆம் ஆண்டு முதல் பிரதம நிலவளக் கூட்டுறவு வங்கிகள் நகைக்கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.22.48 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டிற்கு ரூ.60.00 கோடி நகைக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு, செப்டம்பர் 1995 வரை ரூ.20.19 கோடி அளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### மகளிர் வங்கிக் கிளைகள்

22 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 25 மகளிர் வங்கிக் கிளைகள் தொடங்கப் பட்டுள்ளன. மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் சார்பில் ஒரு மகளிர் வங்கிக் கிளை தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மேலும் 12 மகளிர் வங்கிக் கிளைகள் தொடங்கப் படவுள்ளன.

### கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்

தமிழகத்தில் உள்ள 20,960 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் 1.37 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,157 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளில் பணிபுரிவோர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி வழங்கியதோடு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் நியாய

# கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு கருணைத்தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் ஆணை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் இந்த ஆண்டு தீபாவளியையொட்டி கருணைத்தொகை வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ரூ.3,750 வீதம் 688 பணியாளர்களுக்கு ரூ.25.80 இலட்சமும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியில் ரூ.3,650 வீதம் 629 பணியாளர்களுக்கு ரூ.22.96 இலட்சமும், பிற மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகளில் ரூ.1,600 வீதம் 7,019 பேருக்கு ரூ.112.30 இலட்சமும், கூட்டுறவுச் சங்கங்களில் போனஸ் சட்டப்படி ரூ.625 வீதம் 3,005 பேருக்கு ரூ.18.78 இலட்சமும், போனஸ் சட்டத்தில் வராத கூட்டுறவுச் சங்கங்களான பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.375 வீதம் 40,168 பேருக்கு ரூ.150.63 இலட்சமும், மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச்சங்கங்களில் ரூ.625 வீதம் 100 பேருக்கு ரூ.63 ஆயிரமும், கருணைத்தொகை வழங்கப்படுகிறது. இதன்மூலம் 51,609 பேருக்கு ரூ.331.10 இலட்சம் கருணைத்தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 22 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விழா முன்பணம் (Festival Advance) ரூ.2,000 வழங்கப்பட்டு வருவதை இந்த ஆண்டு முதல் ரூ.3,000 ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன்மூலம், தமிழகத்திலுள்ள 22 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் 7,000 பணியாளர்கள் பயனடைவார்கள். இந்த வகையில், ரூ.2.10 கோடி விழா முன்பணமாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

விலைக் கடைகளில் பணிபுரிகின்ற விற்பனையாளர்களின் சம்பளம், மாதச் சம்பளமாக மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், 1,787 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும், பெண்களால் நடத்தப்படும் 142 துணைக் கூட்டுறவு விற்பனைக் கடைகளும் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.

**மலைவாழ் மக்களின் மேம்பாடு**

மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்தும் பொருட்டு, பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.316.01 இலட்சங்கள் நூறு சதவிகித மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.98.30 இலட்சம் மானியம் வழங்கப்பட இருக்கிறது.

நுகர்பொருட்கள் விநியோகிப்பதற்காக 27 கூண்டு வண்டிகள் ரூ.91.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டிருக்கிறது.

**விவசாய விளை பொருட்கள், இடு பொருட்கள் விற்பனை**

விவசாய விளைபொருட்கள், நியாயமான முறையில், அதே

நேரத்தில் இலாபகரமான விலையில் விற்பனை செய்து, விவசாய உறுப்பினர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. ரூ.2170.55 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

விவசாய இடுபொருட்கள் ரூ.896.85 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

**நுகர்பொருள் விற்பனை**

கூட்டுறவு மூலம் கட்டுப் பாடான விலையில் நுகர் பொருள்கள் விற்பனை செய்யப் படுகிறது. ரூ.6186.25 கோடி மதிப்புள்ள நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் காமராஜர் மாவட்டத்தில் ரூ.8.44 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டது. தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங் களில் ரூ.15.08 கோடி செலவில் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் ரூ.10.81 கோடி மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டத்தில் ரூ.11.60 கோடி மதிப்பீட்டிலும் நடப்பாண்டில் இத்திட்டப் பணிகள் நடைபெற இருக்கின்றன.

திருவண்ணாமலை சம்பு வராயர், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங் களில் இத்திட்டப் பணிகள் நடைபெற உள்ளன.

**கூட்டுறவுக் கல்வி**

கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி 18,480 பேருக்குக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்கப்பட்டது. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக்கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 21,132 பேர் பயன் அடைந்திருக்கிறார்கள்.

கூட்டுறவுப் பணியாளர் களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது இதில் மாவட்ட, மாநில அளவில் பரிசுகள் வழங்கப்பட்டதோடு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா சுழற் கோப்பையும் அளிக்கப்பட்டது. இப்போட்டிகளில் 15,000 பேர் கலந்து கொண்டார்கள்.

உறுப்பினர் கல்வித் திட்டத்தின் மூலம் 16.80 இலட்சம் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. புதியதாகக் கூட்டுறவுச் சங்கங்களில் 32,300 உறுப்பினர்கள் சேர்ந்தார்கள். தமிழகத்திலுள்ள அனைத்து வானொலி நிலையங்கள் மூலமும் கூட்டுறவுக் கல்வி மாணவர்களுக்கு ஒலி பரப்பப் பட்டது. இதில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயன் பெற்றார்கள்.

பர்கூரிலும், பட்டுக்கோட்டை யிலும் செயல்படுகின்ற தொழிற் பயிற்சிக் கூட்டுறவு நிலையங்கள் சுய வேலைவாய்ப்பினைத் தொடங்குகின்ற வகையில் தொழிற்பயிற்சி அளித்து வரு கின்றன. 866 பேர் இதுகாறும் பயன் பெற்றிருக்கிறார்கள்.

**விழுகின்ற விதை நல்ல விதையாக இருந்தால், அது கடலில் விழுந்தாலும் அங்கே ஒரு தீவு உருவாகும்.**

**—மலேசியப் பழமொழி**

**மேலும் மேம்பாட்டுப் பணிகள்**

☆ நாகப்பட்டினத்தில் மகளிர் நகரக் கூட்டுறவு வங்கிக் கிளை தொடங்கப்படும்.

☆ ரூ.200 இலட்சம் செலவில் 1000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வங்கி முகப்புகள் அமைக்கப் படும்.

☆ விழுப்புரத்தில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையும் புதிதாக உரு வாக்கப்படும்.

☆ விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்குவதற்கு 100 சிறப்பங்காடிகள் தொடங்கப்படும்.

☆ அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் கூட்டுறவுச் சிறப்புப் பாடமாகக் கொண்டு இளங்கலை, முது கலை பயிலுகின்ற மாணவர் களில் அதிகம் மதிப் பெண்கள் பெறுவோருக்குத் தங்கம், வெள்ளிப் பதக் கங்கள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

☆ காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் திருமண மண்டபம் கட்டப் படும்.

☆ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் முன்னெச்சரிக்கை மணி, தீயணைப்புக் கருவிகள் பொருத்துவதோடு சுற்றுச் சுவரும் எழுப்பப்படும்.

☆ மதுரையில் உள்ள கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.1.5 கோடியில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**அலுவலர்களுக்குப் பதவி உயர்வு**

கூட்டுறவுத்துறையின் மூலம் தமிழக ம்க்களுக்கு அளப்பரிய சாதனைகள் புரிவதில் பணியாளர்கள், அலுவலர்களின் பணி மகத்தானதாகும். கடந்த நான்காண்டுகளில் 1,127 இளநிலை ஆய்வாளர்கள் முதுநிலை ஆய்வாளர்களாகவும், 1,092 முதுநிலை ஆய்வாளர்கள் கூட்டுறவுச் சார்பதிவாளர்களாகவும், 347 சார்பதிவாளர்கள் துணைப் பதிவாளர்கள், 55 துணைப் பதிவாளர்கள் இணைப் பதிவாளர்களாகவும், 9 மண்டல இணைப்பதிவாளர்கள் கூடுதல் பதிவாளர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டு உற்சாகப் படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னால் ஒரே நேரத்தில் வரலாறு காணாத வகையில் 45 கூட்டுறவுச் சார்பதிவாளர்கள் துணைப்பதிவாளர்களாகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுப் பணி அமர்த்தப்பட்டார்கள்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை, கோபுரமென வளர்ந்து, ஏழை எளியவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வருகின்றது என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

# தமிழக அரசின் திட்டங்களுக்குத் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் பாராட்டு!

கடந்த 6.10.1995 அன்று தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவரான (Chairperson, National Commission for Women, New Delhi) திருமதி வி. மோகினிகிரி அவர்கள் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களோடு சென்னைக்கு வந்திருந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து உரையாடினார். அப்போது தமிழ்நாட்டில் மகளிர் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் முன்னேற்றத் திட்டங்களைப் பற்றிக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் டில்லி திரும்பிய தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி மோகினிகிரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு எழுதி அனுப்பிய கடிதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் மகளிர் முன்னேற்றத் திட்டங்கள் தமிழ்நாட்டில் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து தன்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்கள்.

குறிப்பாக, "மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 15 அம்சத் திட்டம்" (15 Point Programme for Women and Child) மகளிருடைய பிரத்யேகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாநிலம் முழுமையும் அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் "குடும்ப நீதிமன்றங்கள்' (Family Courts)" மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்" (All Women Police Stations) ஆகிய அமைப்புகள் வெகு . சிறப்பாகச் செயல்பட்டு மகளிருடைய பிரச்சினைகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது குறித்து தான் பெருமகிழ்ச்சி அடைவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

# தமிழ் நாட்டில் பனைத்தொழில்

திரு. சோ. சௌரிராஜன்
இணை இயக்குநர்

தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ஒரு தொழில் கூட்டுறவு இணையம். மாநில அளவிலான இக் கூட்டுறவு இணையம் 1932-ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சட்டத்தின்படி 21.10.1.57-இல் பதிவு செய்யப்பட்டு 16.11.1958 முதல் செயல்படத் தொடங்கியது. இவ்விணையம் தமிழகம் முழுவதையும் நிர்வாக எல்லையாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் தலைமைச்செயல் அலுவலரைப் பதிவாளராகக் கொண்டு, அதன் கட்டுப்பாட்டின்கீழ் செயல் பட்டுவந்த இக்கூட்டுறவு இணையம், தமிழக அரசு பனைத்தொழிலை அபிவிருத்தி செய்ய ஏற்படுத்தியுள்ள "தமிழ்நாடு பனைபொருள் அபிவிருத்தி வாரியத்தின் கீழ்" ஒரு மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலரைப் பதிவாளராகக் கொண்டு செயல்படவுள்ளது, இவ்வாரியம் கடந்த 6.1.1995 முதல் தனது பணியைத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் பனைத் தொழிலை நம்பி வாழும் ஏராளமான பனைத் தொழிலாளர்களின் வளர்ச்சி மற்றும் அவர்களின் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த இணையம் பனைத்தொழில் தொடர்பான அனைத்துப் பணிகளையும், மேற்கொண்டு தமிழகக் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்குச் சிறப்பு பணிபுரிகின்றது.

இம்மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணையம் ஒரு மூன்றடுக்கு முறையிலான நிர்வாக அமைப்பு முறையில் செயல்பட்டு வருகிறது. அதாவது, கிராமப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களை, சம்பந்தப்பட்ட அந்தந்த மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாகித்து வருகின்றன. அத்தகைய மாவட்ட சம்மேளனங்களை இம்மாநில இணையம் கட்டுப்படுத்தி வழி நடத்தி வருகின்றது. தமிழகம் முழுவதும் 1578 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏழு மாவட்ட அளவிலான பனைவெல்ல விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனங்களும் செயல்பட்டு வருகின்றன:

**இணையமும், கிளைகளும்:**

இம்மாநிலச் சம்மேளனம் 22 கிளைகளைத் தமிழகமெங்கும் நிறுவி, செயல்படுத்தி வருகின்றது. இக்கிளை நிலையங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் கச்சா பனைப் பொருட்களில் சிறப்பு வாய்ந்தவைகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை மூலப்பொருள்களாகக் கொண்டு பல்வேறு வகையான பனைப்பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றது. குறிப்பிடத்தக்கதாக தூத்துக்குடிப் பகுதியில் உள்ள குளச்சல், வேதாரண்யம் போன்ற கிளைகளின் மூலம் பனந்தும்பும் திருச்செந்தூர்ப் பகுதியில் வில்லிபுத்தூர் பகுதியில் பனங்கற்கண்டையும் மதுரைப் பகுதிகளாகிய மானாமதுரை, மதுரை, சிவகங்கை போன்ற கிளைகளின் மூலம் பனை ஓலைகளினால் செய்யப்படுகின்ற பொருட்களையும் தென்னிலை, மானாமதுரை, வேடந்தாங்கல், புதுக்கோட்டை போன்ற பகுதிக் கிளைகளில் தூரிகைகள் மற்றும் தும்பும் உற்பத்தி செய்து வருகின்றது. இதுவன்றி, மாநில இணையம் சில குறிப்பிட்ட திட்டக் கிளைகளின் மூலம் அனைத்துப் பனை உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருகின்றது.

மாநில இணையம் மற்றும் கிளைகள் உற்பத்தி செய்திடும் பனைப்பொருட்களை இவ்விணையம் "பனைவிற்பனை அங்காடிகளின்" "PALM KRAFT" மூலம் விற்பனை செய்து வருகின்றது. சென்னை நகரின் சில பிரதான மையங்களிலும், சுற்றுலா மையங்கள் மற்றும் புனிதத் தலங்களிலும் இவ்விற்பனை மையங்கள் இயங்கி வருகின்றன.

**பனைப்பொருட்கள்:**

பனையிலிருந்து பல்வேறு உண்ணும் வகையான பொருட் களும், உண்ணாவகையான பொருட்களும் உற்பத்தி செய்யப் படுகின்றன. உண்ணும் பொருட் களாகப் பனைவெல்லம், பனஞ் சர்க்கரை, பனங்கற்கண்டு, பதப் படுத்தப்பட்ட நுங்கு, பனஞ் சர்க்கரையால் தயாரிக்கப்பட்ட பிஸ்கட் வகைகள், மிட்டாய் வகைகள் போன்றவற்றுடன் குளிரூட்டப்பட்ட பதநீர் மற்றும் பானவகைகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

உண்ணாப்பொருட்களாக பனந்தும்பு, பனந்தும்பு தூரி கைகள், பனை ஓலைக் கைவினைப்பொருட்கள், பனை நார், கைவினைப்பொருட்கள் மற்றும் பொம்மைகள் போன் றவை உற்பத்தி செய்யப் படுகின்றன.

**பனந்தும்பு:**

பனைமடல்களிலிருந்து தயாரிக்கப்படும் பனந்தும்பு அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் ஒன்றாகும். இது, மாநில இணைய கிளைகள் மற்றும் பனைவெல்லக் கூட்டுற வுச் சங்கங்களின் பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்து தரும் பனந்தும்பினை நியாயமான விலைக்குக் கொள் முதல் செய்யப்பட்டு, அவைகள் இவ்விணைய கிளைகளின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றது. இதன் மூலம் பனைத்தும்பு உற்பத்தியாளர்கள், தான் உற்பத்தி செய்த தும்பிற்கு நியாயமான விலை பெறுவ துடன், தொடர்ந்து வேலை வாய்ப்பும் பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இந்த இணையம் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவில் பனந்தும்பினை ஏற்றுமதி செய்து வருகின்றது.

பனந்தும்பு ஏற்றுமதி செய்யப் படுவதோடல்லாமல், இத்தும்பி னால் பலவகையான தூரி கைகள் உற்பத்தி செய்யப்படு கின்றன. இந்த வகைத்தூரி கைகள் விலை மலிவானதாக வும், நீடித்து உழைக்கத்தக்க தாகவும் உள்ளதால், பல்வேறு தொழில் துறைகளில் இந்தத் தூரிகை வகைகள் பயன்படுத்தப் படுகின்றன. சென்னை மாநக ராட்சியின் சாலைத் துப்புரவுப் பணிகளுக்கும் தமிழகம் மற்றும் ஆந்திரத்தில் போக்குவரத்து நிறுவனங்களின் வாகனங் களைத் துப்புரவு செய்யவும், மத்திய மற்றும் தென் தமிழ கத்தின் நூற்பாலைகளுக்கான துப்புரவுப் பணிகளுக்கானது மான பலவகைத் தூரிகைகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகிக்கிறது. இவ்வாறு பனந்தும்புத் தூரிகைகள் தொழில் துறைமட்டுமின்றி, வீட்டு உப யோகங்களுக்கான பலவகை யான தூரிகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தூரிகை உற்பத்திக்குப் பயன்படுத்தப் படும் பனந்தும்பு, கிராமக் கைவினைஞர்கள் உற்பத்தி செய் யும் தும்பினால் செய்யப் படுவதால் இக்கிராமத் தொழி லாளர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பும், பொருளதார உயர் வும் பெறுகின்றனர்.



**ஈச்சங்கூடைகள் உற்பத்தி**

இவ்விணைய தங்களிக்குப் பம் கிளையின் மூலம் சுமார் 200 ஈச்சங்கூடை முடையும் தொழி லாளர்களுக்குக் கடனுதவி செய்து அவர்கள் உற்பத்தி செய்யும் ஈச்சங்கூடைகளைக் கொள்முதல் செய்து அவற்றைச் சென்னை மாநகராட்சி போன்ற நகராட்சிகளுக்குத் துப்புரவுப் பணிகளுக்கு விநியோகித்து வரு கின்றது. இதன் மூலம் கிராமக் கூடைமுடைவோரின் குடும் பங்கள் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பும் வருவாயும்

முதல் அட்டை சொல்லும் செய்தி:

# இந்தியக் குடியரசுத் துணைத்தலைவரை மாண்புமிகு முதல்வர் வரவேற்றார்

மேதகு இந்தியக்குடியரசு துணைத்தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்கள் இரண்டு நாள் பயணமாகச் சென்னை வந்தார். மதுரையில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டு 7.11.95 அன்று மாலை 4.45 மணிக்குச் சென்னை விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடன் அவருடைய துணைவி யாரும் வந்திருந்தார்.

அவரை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். பின்னர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். மாண்புமிகு அமைச்சர்கள் சால்வை அணிவித்துக் குடியரசு துணைத்தலைவரை வரவேற்றனர்.

தலைமைச்செயலாளர் திரு.என். ஹரி பாஸ்கர் இ.ஆ.ப., காவல் துறைத்தலைவர் திரு.டபிள்யூ.ஐ.தேவாரம் இ.கா.ப. சென்னை நகரக்காவல் துறை ஆணையாளர், திரு.வீரராகவன் இ.கா.ப., ஆற்காடு இளவரசர் திரு.முகமது அப்துல் அலி உள்பட ஏராளமானவர்கள் மேதகு குடியரசுத் துணைத்தலைவரை வரவேற்றனர்.

செய்து அவர்கள் தொழில் செய்திட உதவி வருகின்றது. இவர்கள் உற்பத்தி செய்யும் பனைவெல்லத்தை, நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து விற்பனை நடவடிக்கைகளைத் தானே மேற்கொள்ளுகின்றது. இதன் மூலம் ஏழைப் பனைத் தொழிலாளர்கள் தனியார் வியாபாரிகளின் பிடியில் சிக்கித் தனது உற்பத்திப்பொருட்களை வாங்கிய கடனுக்கு ஈடாகக் கொடுத்து ஏழ்மையில் உழலும் நிலை தவிர்க்கப்படுவது மட்டு மல்லாமல், தான் உற்பத்தி செய்த பனைவெல்லத்தை விற்க, விற்பனை மையங்களைத் தேட வேண்டிய அவசியமில்லாமலும், நட்டத்திற்கு விற்கும் நிலை யிருந்து காப்பாற்றப்படவும் படுகின்றனர்.

இதேபோன்று பனைவெல்லம் காய்ச்சவும், பனைஓலை முடையவும் மத்திய அரசின் ஒப்புக் கொள்ளப்பட்டத் திட்டத் தின்கீழ், பம்பாய் கதர்க் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதியுதவியைப் பெற்றுத் தொழில் நுட்ப வல்லுநர்களுக்குக் கடனு தவிகள் வழங்கப்படுகின்றன: இவை பெரிதும் பெண்கள் மேற்கொள்ளக்கூடிய தொழி லாக இருப்பதால், இக்கடனுதவி பெறும் பெண்தொழிலாளர்கள் தொடர்ந்து தொழில் செய்யவும், போதிய வருவாய் ஈட்டவும் வழிவகை ஏற்படுகின்றது. இப் பணியின் மூலம் ஏராளமான பெண்கள் வேலைவாய்ப்பும், வாழும் வழியும் பெறுகின்றனர். இவர்களின் உற்பத்திப் பொருட் களையும், மாநில இணையம் தனது கிளைகளின் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது.

**தொழிற் கருவிகள்:**

இவ்விணையம் பனைத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு தொழிற் கருவிகளை வழங்கு வதுடன், கருவிகளைக் கொள் முதல் செய்யக் கடனுதவியும் செய்து வருகின்றது. பனை ஓலைத் தொழில் மற்றும் பனைநாரப் பொருள்கள் தொழில் செய்யத் தேவையான கருவிகளைக் குறிப்பாக, பெண்களுக்கு வழங்கிப் பயிற்சி அளித்து, தொழில் செய்ய உதவி வருகின்றது.

தற்போது, மாநில அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தின் 1000 பனைத்தொழிலாளர்களுக்குப் பனை ஏறும் கருவி ஒன்றை அறிமுகம் செய்து மாதிரித் திட்டமாகச் செயல்படுத்த உள்ளது. இத்திட்ட வெற்றியின் அடிப்படையில் இது தமிழகத் தில் மேலும் விரிவுபடுத்தப்படும். இதனால் பனை ஏறுவதைக் கடினமாகக் கருதிடும் கிராம

இளைஞர்களுக்கு ஆர்வமேற்படும் நிலையும் கிராம இளைஞர்களுக்குப் பனைத்தொழிலில் ஈடுபாடும் கிராம இளைஞர்களின் வேலைவாய்ப்பும் கூடும். இதற்கு அரசு ரூ 10.00 லட்சம் நிதியுதவி அளித்திட இசைந்துள்ளது.

**மாநில இணையப்பணிகள்:**

மாநில அளவிலான இவ்விணையம், மாவட்டச் சம்மேளனங்களுக்கு அரசினன் நிதி உதவிகளைப் பெற்றுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தொழிற்கடன்கள் வழங்குவதும், அவற்றை வசூல் செய்வதுமான பணிகளுடன், உற்பத்தி, விற்பனை, ஆய்வு, அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், கண்காணித்தல், பயிற்சி அளித்தல் போன்றவற்றுடன் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கிவருகிறது. இத்துடன், கிராமப் பனைத்தொழில் கூட்டுறவு நிறுவனங்களை வளர்ப்பதும் விரிவுபடுத்துவதும் இதில் ஒன்றாகும்.

**வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி:**

மாநில இணையம், உற்பத்தி செய்த மற்றும் தமிழகமெங்கும் பனைத்தொழிலாளர்களிடம் கொள்முதல் செய்த பனந்தும்பினைத் தரவாரியாக வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறது. 1994-ஆம் ஆண்டில் 125.83 இலட்சம் ரூபாய்க்குப் பனந்தும்பினைப் பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. அத்துடன் ரூ 9.72 இலட்சம் மதிப்புள்ள பனை ஓலைப் பொருட்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

**நிதியுதவி:**

மத்திய அரசின் கதர்க் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ 250 இலட்சம் கடன் மற்றும் மானியத்தொகையினை பனைத் தொழில் வளர்ச்சிக்காக அளித்து வருகிறது. 1994 -ஆம் ஆண்டுக்கானப் பனைத்தொழில் வளர்ச்சிக்காக மத்திய கதர் ஆணைக்குழு ரூ 15.29 இலட்சம் மானியமாகவும், ரூ 211.00 இலட்சம் கடனாகவும், ரூ 150.00 லட்சத்தினை வங்கிக் கடனாகவும் அங்கீகரித்துள்ளது.

**பனைத் தொழில் பயிற்சி:**

மாநில இணையம் தனது கடலூர் மண்டலப் பனைப் பொருள் பயிற்சி நிலையம் மூலம் ஆர்வமுள்ள கிராம இளைஞர்களுக்குப் பனைத் தொழில் பயிற்சி அளித்து வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தில் தென்னிந்திய மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கர்நாடகம் மற்றும் தமிழக மாநில இளைய சமுதாயத்தினருக்குப் பனைத் தொழில் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சித திட்டத்திற்கு மத்திய அரசு கதர் ஆணைக்குழு நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகையாக மாதம் ரூ.350 பயிற்சி பெறும் மூன்று மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது. இத்துடன் மாநில அரசின் திட்டங்களின் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனைத்தொழில் பயிற்சிகள் பல்வேறு பனைத்தொழில்களுக்கும் அளிக்கப்படுகின்றது.

**பொருட்காட்சிகளின் பங்கீடு:**

பனைத்தொழில் குறித்த

## ரூ. 87 இலட்சம் மதிப்பில் திருப்பத்தூரில் புதிய நீதிமன்றக் கட்டடம்

**நீ**திமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் நீதி நிர்வாக மேம்பாட்டுத் திட்டத்திற்குத் (Scheme of Development of Judiciary) தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தமிழக அரசு 1993-94-ஆம் ஆண்டு முதல் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

இந்த ஆண்டு வரை 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நீதிமன்றங்களுக்கும், நீதிமன்ற அலுவலர்களுக்குமான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

1995-96-ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் மூலம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் திருப்பத்தூரில் புதிதாக நீதிமன்றக் கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்டுவதற்காக 87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்தப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

# இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவீர்!

—மாண்புமிகு பிரதமருக்கு மாண்புமிகு முதல்வர் கடிதம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 3.11.1995 அன்று மாண்புமிகு பாரதப் பிரமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இலங்கையில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனக்கலவரம் குறித்தும், இலங்கை இராணுவப் படைகளின் தாக்குதல்களினால் நாள்தோறும் அப்பாவித் தமிழர்கள் பலியாவதாக வெளிவரும் செய்திகளால் தமிழக மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், மத்திய அரசு இது குறித்து இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அப்பாவித் தமிழர்களை இராணுவ தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தார்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பதில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களைத் தான் குறித்துக் கொண்டதாக,மாண்புமிகு பிரதமர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

அறிவையும், பனைப்பொருட்களின் சிறப்பையும் மக்கள் உணரும் வகையில் அரசு நடத்தும் விழாக்களிலும், பொருட்காட்சிகளிலும், இவ்விணையம் பங்கேற்று சிறப்பதுடன் பனைப் பொருட்களுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கச் செய்கின்றது. சென்னையில் நடைபெறும் ஒவ்வொரு அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியின் கூட்டுறவு அரங்கினில் இவ்விணையம் பங்கேற்று, கணிசமான அளவு பனைப்பொருட்களை விற்பனையும் செய்து வருகிறது. இதனால் இது இவ்வரங்கு அமைப்பு பொறுப்புத் துறையான கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டையும் பெற்றுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு ஒன்றியம் நடத்தும் கூட்டுறவு வார விழாவின் போதும் தமிழகத்தில் சிறந்த பனைத் தொழில் கூட்டுறவு இணையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டப் பெற்று வருகிறது.

மேலும், கதர்க் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் காதி கிராமோத்யோக் பவன் கிண்டி காந்தி மண்டபத்தில், நடத்தும் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பெறும் பொருட்காட்சியிலும் பங்கு பெற்று பொதுமக்களின் சிறப்பான வரவேற்பை ஒவ்வொரு ஆண்டும் பெற்று வருகிறது.

**உற்பத்தி, விற்பனை:**

*1994 -95-ஆம்* ஆண்டில் இவ்விணையம் இதரத் தமிழகக் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் உற்பத்திகளின் மூலம் ரூ 121.90 இலட்சம் மதிப்புள்ள பனைப்பொருட்களை உற்பத்தி செய்து ரூ 241.77 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

தமிழகம், இந்தியாவிலேயே மிக அதிக அளவு பனை மரங்களைக் கொண்டுள்ள சிறப்பினைப் பெற்றுள்ளதால் அரசு புதிதாக அமைத்துள்ள தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளின் மூலம், தற்போதுள்ள இவ்விணையத்தின் பணி எதிர்வருங்காலங்களில் மேன்மேலும் சிறப்பு பெறும் என்பதில் ஐயமேதும் இல்லை!

# 1 இலட்சத்து 40 ஆயிரம் கரும்பு விவசாயிகளுக்குப் பரிசு

## கரும்புக்குக் கூடுதல் விலை மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்திலுள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகளுக்கு 1994-95-ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு 10 ரூபாய் வீதம் கூடுதல் விலை கொடுக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தக் கூடுதல் விலை தீபாவளிக்கு முன்னர் வழங்கப்படும். இந்தக் கூடுதல் விலை ஏற்கெனவே அரசால் நிர்ணயிக்கப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையான டன் ஒன்றுக்கு 525 ரூபாய்க்கும் (8.5 சதவிகித சர்க்கரை அளவிற்கு) மேலானதாகும்.

தமிழகத்திலுள்ள 14 கூட்டுறவு மற்றும் 3 பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகள் 1994-95-ஆம் பருவத்தில் ஈட்டிய லாப நட்ட அடிப்படையில் கரும்பிற்கு இந்தக் கூடுதல் விலை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 1994-95 அரைவைப் பருவத்தில் மாநில அரசு கரும்பு விலை நிர்ணயம் செய்யும்பொழுது மத்திய அரசின் விலையைவிட டன் ஒன்றுக்கு 134 ரூபாய் கூடுதலாகக் கொடுக்க ஆணையிட்டது. இது 1993-94-இல் மாநில அரசு மத்திய அரசு விலையைவிடக் கூடுதலாக நிர்ணயித்த 105-ஐ விட 29 ரூபாய் மேலும் கூடுதலாகும். எந்த ஒரு மாநில அரசும் கரும்பு விலையை மத்திய அரசு விலையைவிட இவ்வளவு கூடுதலாக இதுவரை நிர்ணயம் செய்ததில்லை.

விவசாயிகள் நலனைக் கருதி தமிழக அரசு, மாநில அரசு கரும்பு விலையை, மத்திய அரசின் விலையைவிட டன் ஒன்றுக்கு 134 ரூபாய் கூடுதலாகக் கொடுத்திருந்தும், அதை ஈடுகட்டும் அளவில் வெளிச் சந்தை சர்க்கரை விலை உயராததாலும், இந்த ஆண்டு அபரிதமாகத் தேவைக்கு மேல் தமிழகத்தில் உற்பத்திச் செய்யப்பட்ட பெருமளவு கரும்பை, விவசாயிகளின் நலன் கருதி, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் எடுத்து அரைவை செய்ததன் காரணமாக ஆலை அரைவை, செப்டம்பர் 1995 வரை நீடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு ஜூலை முதல் செப்டம்பர் 1995 வரை கரும்பு அரைவை செய்ததில், கரும்புச் சாற்றில் மிகக் குறைவான சர்க்கரை அளவே இருந்ததால், அனைத்து ஆலைகளுக்கும் கணிசமான நட்டம் ஏற்பட்டது.

> **எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்பமாக வாழ வேண்டுமென்றும், இவ்வருள் நோக்கம் கொண்டே தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் திண்ணிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.**
>
> -மொழிஞாயிறு
> ஞா. தேவ நேயப்பாவாணர்

இருப்பினும் கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கரும்புக்குக் கூடுதல் விலையாக டன் ஒன்றுக்கு 10 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென முடிவெடுத்து அவ்வாறே அதற்கான ஆணையிட்டுள்ளார். இதனால் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த சுமார் 1,40,000 கரும்பு விவசாயிகள் மொத்தம் 11 கோடி ரூபாய் பெற்று பயனடைவார்கள்.

இந்தக் கூடுதல் கரும்பு விலையும் சேர்த்தால், 1994-95-ஆம் அரவைப் பருவத்தில் கரும்புக்கான சராசரி விலை டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 541.20 ரூபாயாகவும், அதிகபட்சம் 602.90 ரூபாயாகவும் இருக்கும்.

## தருணம் இதுவே, தவறவிட்டால் உலகம் நம்மை இகழும்!

# தமிழர் இனிப் பிரியோம் என்றே சூளுரைப்போம்
# புரட்சித்தலைவியின் தலைமையில் இணைந்து நிற்போம்!

### மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
## திரு கு.ப. கிருஷ்ணன்

**எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் 2.1.1995 அன்று இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் எனும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் பாடிய கவிதை.**



தமிழுக்கு ஆராதனை செய்வதற்கே
தரணித்தமிழர் எல்லாம் தஞ்சையில் கூட வைத்த
இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பரணியே!
நீக்கமற என் நெஞ்சில் நிறைந்திருக்கும் பேரருளே!
நித்தமும் என் நெற்றியில்
நின் பாதமண்ணே பற்றியிருக்கும்
துஞ்சும் பொழுதும்- தாயே, தமிழே,
நின்பதமே நெஞ்சில் கொண்டிருக்கும்
தொண்டன் நான் வணங்குகின்றேன்

தஞ்சையில் இத்தமிழ்ச் சபையில் மட்டுமல்ல;

தஞ்சையில் இத்தமிழ்ச் சபையில் மட்டுமல்ல;
அருளே! அமிழ்தென நீ அரசோச்சும் சபையிலும் என்னை
அமர வைத்து அழகு பார்க்கும் அன்னையே!
ஒவ்வொரு கணமும் உன்னையே வணங்கி
உன் செவ்விய சீரடி சிந்தையில் தாங்கி
கவியரங்கம் தொடங்கிக் கடைதிறப்பு முற்படுவேன்
தமிழாய் நின்று வாழ்த்து தாயே!

அல்லும் பகலும் அயராது வழி நடத்தி
அகில உலகம் எல்லாம் அழகாய்க்கூட வைத்தாய்
தமிழ்க்கூடம் நிகழ்த்தியுள்ள தாய்க்கொரு
வணக்கம் சொல்வோம் ஆயிரம் நன்றி ஏந்தி

தென்னவனே
காரைக்குடியில் தமிழ் உண்டவனே
இக்கவியரங்க முன்னவனே!
கலை வளர்க்கும் அன்னை என்னும்
துறை வளர்க்கும் நல்லமைச்சே!
நண்புநிறை அமைச்சர்களே!
தமிழ் வணக்கம் கூறுகின்றேன்
தட்டாமல் ஏற்பீர்கள் நட்பால்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்!
இதுதானே கவியரங்கப் பாடுபொருள்

பித்தம் தலைக்கு ஏறியதால், தமிழ்ப்
பித்தம் தலைக்கு ஏறியதால்
வெள்ளிப்பனிமலை ஆகும் சித்தரைப் போல்;
வெள்ளித்திரை ஆண்டவனே!
ஆண்டவன் தலைமையில் அன்று ஒரு தமிழ்ச் சங்கம்
இன்றும் ஒரு தமிழ்ச் சங்கம்
இதுவே தொடர்கிறது அன்னையின் சக்தியால் இன்று.

சிவனடி பொன்னடி பூங்குன்றன்
மேத்தா முத்துலிங்கம் சண்முகம் எனக்
கொட்டும் தமிழ் அருவிகள் குவிந்துள்ளனர் இங்கே.
குற்றாலத்தில் கூட ஐந்தருவி தான்
அருவியே இல்லாத தஞ்சைக்கு
தமிழருவி 7 தந்திட்ட அன்னைக்கு
அறிவார்ந்த தமிழ் சுவைக்கும் வணக்கம்.

நஞ்சை செழிக்கும் நல்ல மண் தஞ்சை மண்
நெல், வாழை, கரும்புக்கும்
நின்ற காவேரி வளம் சேர்க்கும்,
சொல்லுக்கும் வளம் பெருக்கும்
சுந்தரக் கவிஞர்களோ

அணிவகுத்து அமர்ந்துள்ளார்;
அலைகடலாய்ச் சுவைஞர் கூட்டம்
தலைவி அவர் சொல்படியே தஞ்சை முழுவதுமே!

கவிதையே வாழ்க்கையாக
வாழ்க்கையே கவிதையாக
கூடு கட்டிய அக்கினிக் குஞ்சு
வாழ்த்துச் சொன்ன பாரதி.

தமிழ் எங்கள் உயிர், தமிழ் எங்கள் மூச்சாம்,
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைவித்தால்
சங்காரம் நிஜம் எனச் சங்கு முழக்கிய
தீப்பந்தப் பாட்டுக்காரன்
தீந்தமிழ் இயக்கத்தின் நெருப்பு வித்து
திராவிட இயக்கத்தின் சொத்து
அவனே புரட்சிக் கவி பாரதிதாசன்.

உள்ளத்தில் உள்ளது கவிதை,
தெள்ளத்தெளிந்த தமிழில்
உண்மை தெரிந்துரைப்பது கவிதை என்று
நெஞ்சில்இட்டுக் காட்டிய நாஞ்சில் நாட்டுக் கவிஞன்
தேசிக விநாயகம் ஒரு மெல்லிய தமிழ் யாகம்.

"கத்தியின்றி, ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது"
எனக் கட்டியம் கூறியவன்
"தமிழன் என்ற ஒரு இனம் உண்டு;
தனியே அவனுக்கு ஒரு குணம் உண்டு", என
தனி முத்திரை இட்டவன்
நாமக்கல் கவிஞன்.

அந்தி நேரத்து ஆனந்தக் காற்றாய்,
அன்பு மணக்கும் தேன் சுவைப் பாட்டாய்

அமுத விருந்து அளித்த பட்டுக்கோட்டை.
“ஆளும் வளரணும், அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி” என
ஆதங்கப்பட்ட ஆண்மைக் கவிஞன்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாட்டுக்கோட்டையை மட்டுமின்றி தமிழ்
யாப்புக் கோட்டையும் பலப்படுத்திய
நாட்டுக்கோட்டைக் கவிஞன்
நல்ல தமிழ்க் கவியரசு கண்ணதாசன்.
பாட்டுக்கும், தமிழுக்கும் பாலம் அமைத்ததுடன்
மெட்டுக்கும் பாட்டு எழுதும் மேன்மையை நமக்கு அளித்தவன்,

கட்டுக்குள் வைக்காமல், தமிழைக்
கட்டுக்குள்ளே வைக்காமல்
கட்டவிழ்த்து விட்டதனால்,
எட்டு விரிந்து படர்ந்தது தமிழ் வேர்கள்.
இதோ விழுதுகளாம் இவர்கள்,
விழுதுகள் வீழ்ந்தாலும்
விழுதுகள் மண்ணில் வீழ்ந்தாலும்
என்றுமே தாழாத விழுதுகளே,
உங்கள் தமிழால் தமிழ் உலகை ஒன்று இணைப்பீர்.

இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் தலைவாயிலில்
தமிழர்கள் இன்று தஞ்சையில் சூளுரைப்போம்!
தமிழர் இனிப்பிரியோம்!
தமிழ் இனமே ஒன்றிணைந்தால்
உலகமே நம் கையில்!
தருணம் இதுவே, தவற விட்டால்
சரித்திரம் நம்மை இகழும்.
எதிர்காலக் கப்பலுக்கு மாலுமியாக இருக்கின்றார்
இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

தமிழர் ஒற்றுமைக்குத் தஞ்சையிலே விதையிடுவோம்
வேங்கைக்கு வீழ்ச்சியில்லை
தமிழர் எழுச்சிக்கு சாவு இல்லை.
வாழும்போதே அமைப்போம்,
வையகத்துத் தமிழர் ஒன்றுமையை!

உலகத் தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டு ஓங்க,
என்றும் இந்த நாட்டில் தமிழே ஆள
குஞ்சரம் எதிர்த்த கோழியூரில் பிறந்து,
(குஞ்சரம் எதிர்த்த கோழியூர்-உறையூர்)
கோபாலன் பள்ளிகொண்ட மண்ணில், தவழ்ந்து
வேதா நிலையத்தில் கூராகி,
தமிழகத்தை ஆளுகின்ற
தங்க மனத்தலைவி, எங்கள்
வெற்றித் தேவதையின் அருள்பெற்று
எதிர்வரும் தடைகள் ஏதேனும் இருப்பின்
பொடிப் பொடியாக்கிப் பொசுக்கிட
தம் உடலை விறகாக்க,
உதிரத்தை நெய்யாக்கத்
தயங்கிட மாட்டோம் நாம்.

மொழிக்காக முழங்கிடுவோம்,
தடை எதுவும் உடைத்திடுவோம்,
தலைவி சொல் வழி நடப்போம்.
எழுக தமிழ் இனமே.
இனி உலகமே உன் காலடியில்

சொல்லருவி பாய்ந்து சுவை சேர்க்கும் கவியரங்கம்
தொடங்கட்டும்
நந்தி போல் இல்லாமல்-தஞ்சை
நந்தி போல் இல்லாமல்
விலகுகிறேன். நன்றி, வணக்கம்.

மருத்துவக் கட்டுரை:

# "பூவைத் தாங்கும் இதயம்"

## டாக்டர் மு. தனபால் எம்.டி.டி.எம். (Cordio)

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்று பேரறிஞர் அண்ணா கூறினார். பூவைத் தாங்குகின்ற காம்பு மெல்லிய தாக இருந்தாலும், உறுதியாக இருக்க வேண்டும். சுமைதாங்கி பழுதில்லாமல் இருந்தால்தான், சுமையைத் தாங்க முடியும். நாளைய உலகைப் படைக்கப் போகின்ற இளம் பிஞ்சுகளைத் தன் வயிற்றில் சுமக்கின்ற தாயின் உள்ளமும் இருதயமும் ஆரோக்கியமாக இருந்தால்தான் நல்ல இளம் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

கண்ணில் மின்னுகின்ற ஒளியோடும் மனதில் மிதக்கின்ற கனவுகளோடும் வந்து நின்ற மீனா, "டாக்டர் எனக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது, நான் திருமணம் செய்து கொள்ளலாமா?'' என்று கேட்டாள். இந்த மகிழ்ச்சியின் ஊடே அவள் குரலில் சோகத்தின் சாயல் வெளிப்பட்டது.

வேதனையும் பயமும் நிறைந்த முகத்தோடு வந்து நின்ற நிலாவும், அவருடைய கணவரும் ஒன்று சேர்ந்து கேட்ட வார்த்தை இதுதான், "எங்க குழந்தை நல்லபடி பிறக்குமா?"

"தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால், துளிர் விட்டுக் கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறிய உயிரை அழித்து தான் ஆக வேண்டும்" என்று தன் அருகே ராதாவைப் பார்த்துச் சொன்னார் டாக்டர் வனிதா.

மேலே குறிப்பிட்ட மூன்று இளம் பெண்களும் மற்ற பெண்களைப் போல் வாழ்வும், கனவும், எதிர் காலமும் எல்லோரையும் போல் நன்கு அமைய வேண்டுமென எதிர் பார்ப்பதில் தவறேதும் இல்லை. இயற்கை நியதிதான்.

**பேறு காலமும் இதய நோயும்:**

உலகம் முழுவதிலும் நாகரிகம் வளர்ந்து விட்ட முன்னேறிய நாடுகளிலும் கூட முடக்குவாத ஜுரத்தால் (Rheumatic fever) ஏற்பட்ட இருதய நோயினால் பெண்கள் பிரசவ காலத்தில் அவதிப்படுகிறார்கள். முதலில் கூறப்பட்ட மீனாவின் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம்.

ஐந்து வயது முதல் 12 வயது வரை திரும்பத் திரும்பத் தாக்கிய தொண்டைக் கமறல் நோயைச் (Streptococal Pharyngitis) சரிவரக் கவனிக்காமல் விட்டு விட்டதால் மூட்டுகளையும் இருதயத்தையும் ஒருசேரப் பாதித்து, துடிக்கின்ற வால்வுகளை முடக்கி வைத்து, தன் வாழ்வையே நிலைகுலையச் செய்து விடுமோ, என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள் மீனா.

மீனாவின் இருதயத்தின் இடது புறத்தில் உள்ள Mitral valve என்கிற ஈரிதழ் வால்வு சுருங்கி நுரையீரலில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்தின் ஓட்டத்தில் தேக்க நிலையை உருவாக்கி, உடலில் உள்ள பல பாகங்களுக்கும் நல்ல இரத்த ஓட்டம் சரிவரச் செல்ல இயலாத நிலை இந்தப் பெண்ணிற்கு. மீனா கண்டிப்பாக திருமணம் செய்து கொள்ளமுடியும். வாழ்வைச் சீராக அமைத்துக் கொள்ள முடியும். அதற்குமுன் சுருங்கிய வால்வை, Closed Mitral Commissurotomy என்னும் இருதய அறுவைச் சிகிச்சை மூலம், முடக்கப்பட்ட வால்வைச் சரிசெய்து கொண்டு, பெனிசிலின் தடுப்பூசியையும் முறைப் படிப் போட்டுக் கொண்டால், இந்த நோயின் கடுமையிலிருந்து விடுபடலாம். மேலும், இது ஒரு எளிதான அறுவைச் சிகிச்சை ஆகும்.

இரண்டாவதாகச் சொல்லப் பட்ட நிலாவின் நிலை என்ன? சிறிது விரிவாகப் பார்ப்போம். சிறுவயதிலேயே இருதய

நோயால் பாதிக்கப்பட்டார் நிலா. திருமணத்திற்கு முன் அவருடைய பெற்றோர்க்கு அவருடைய திருமணத்தில் இருந்த நாட்டம் அவரது நோயைக் குணப்படுத்த வேண்டும் என்பதில் இல்லை. திருமணம் ஆனது, தாய்மை அடைந்தார். அதனோடு சோர்வும் அடைந்தார், ஏன் ?

அந்த இளம் மொட்டைத் தாங்கும் சக்திகூட அவரிடம் இல்லை. காரணம், அவரின் இருதயத்தின் இடது பக்கத்திலிருந்து மிகத் தீவிரமாக வேலை செய்யும் (Aortic Valve) மூவிதழ் வால்வு அடைப்பட்டு சரிவர இரத்த ஓட்டத்தை உடலின் மற்ற பாகங்களுக்கு அனுப்ப முடியாத நிலை. அதனோடு பழுதடைந்த அந்த வால்வில் கசிவும் இருந்தது. பழுதடைந்து கசிவுறும் இந்த வால்வைச் சீர் செய்துவிட முடியாது. மாற்றப்பட வேண்டும். திருமணத்திற்கு முன்பு. இந்த வால்வை அறுவைச் சிகிச்சை மூலம் மாற்றியிருந்தால், பேறு காத்திலும் குழநதை பிறப்பின் போதும் இவ்வளவு கவலைப் பட வேண்டிய அவசியம் நிலாத் தம்பதியருக்கு இல்லை.

அடுத்து, ராதாவின் நிலையைப் பார்ப்போம். விதியின் விளையாட்டோ? முற்பிறவியின் வினையோ? இந்தக் கொடிய விநோத நோய்க்கு 'Primary Pulmonary Hypertension' என்று பெயர். இதயத்திலிருந்து நுரையீரலுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் இரத்தக் குழாயிலும் அதன் சிற்சில பிரிவுகளிலும் பிறவியிலேயே அமைந்து விட்ட தசைநார்களின் அமைப்பின் குறையால் இந்த இரத்தக் குழாய்களில் இரத்த அழுத்தம் மிகமிஞ்சியே காணப்படும். அதனால் நுரையீரலில் சுத்தம் செய்யப்பட வேண்டிய இரத்த ஓட்டத்தில் தேக்கநிலை ஏற்படுகிறது. நுரையீரலும் அதன் இரத்தக் குழாய்களும் இயல்பாகச் சுருங்கி விரிவடையும் தன்மை இருக்காது. ஆக்ஸிஜனை எடுத்துக் கொண்டு கார்பன் டை ஆக்ஸைடை வெளிவிடுவதில் கோளாறு; அதனால் ஆக்ஸிஜன் பற்றாக்குறை. நாலடி நடந்தாலும் மூச்சுத்தி ணறல்; அதில் திருமணம்- குழந்தைப் பிறப்பு. பேறுகாலத்தைத் தாண்டினாலும் குழந்தை பிறப்பு அவர்களுக்கு மறுபிறவி. இந்த நிலையில் தன்னுயிரைக் கூட தியாகம் செய்யத் துடிக்கும் தாய்மார்களை, தன்நிலை புரியாது குழந்தைப் பிறப்பை பற்றியே நினைத்து, அறியாமையால் மூழ்கியிருக்கும் அபலைகளை, தாயைப்பற்றி கவலையின்றிச் சேயைப் பற்றி கவலைப்படும் கணவன்மார்களை, "திருமணம் நடந்து விட்டது; குழந்தையின்றியே நாங்கள் வாழ்வோம்" என்று உறுதியோடு வாழு தியாக புருஷர்களை. சுகம் தர முடியாத மனைவியை விலக்கி வைக்க கோர்ட்டுக்குச் சென்ற கொடுமைக்காரக் கணவரை நான் நேரில் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். ராதாவின் நிலையை மறைத்து திருமணம் செய்த பெற்றோரை எண்ணி வியப்பும் வேதனையும்பட்டிருக்கிறேன்.

**உண்மை என்பது மேன்மையின் உச்சிதான். ஆனால், உண்மையாக வாழ்வது என்பது அதனினும் மேம்பட்டது.**

**—குருநானக்**

இந்த நோயாளிகள் குறைவான ஆயுள் உடையவர்கள் என்ற முடிவிற்கு மக்கள் வந்து விடமுடியாத அளவிற்கு நல்ல சிகிச்சையோடு பல ஆண்டுகள் வாழ்ந்து காட்டிய நோயாளிகள் நிறையபேர் இருக்கிறார்கள் என்று 'புண்ணுக்கு இட்ட மருந்தாக' புழுக்கத்திலே வந்த தென்றலாக' இதம் தரும் இந்த விவரத்தை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

இருதயத்தில் பிறவியிலேயே ஏற்படும் பல சின்னச் சின்ன குறைகளை வளர்ந்து விட்ட விஞ்ஞானம் மூலம் மிக நுட்பமாகக் கண்டறிந்து அறுவைச் சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**ஆலோசனைகள்:**

1. பிறவியிலேயே இருதயத்தில் உள்ள சில குறைபாடுகளோடு. திருமணம் புரிந்து கொண்டவர்கள், 'கருத்தரிப்பு' என்ற நிலை ஏற்படு முன்னரே சரிவரச் சிந்தித்துத் தனது நோயின் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

2. பேறு காலத்தில் ஏற்படும் கால்வீக்கம், சாதாரண வீக்கம் என்று நினையாது சிறுநீரில் கொழுப்புக் கசிவு, இரத்தத்துடை உள்ள உப்புச்சத்து இரத்த

அழுத்தம் இவைகளைக் கண்டறிய வேண்டும். இதைக் கவனிக்காமல் அசட்டைச் செய்தவர்கள் பின் நிரந்தர இரத்த அழுத்த நோயாளியாக மாறிவிட வாய்ப்புண்டு.

3. பேறுகாலத்தின் போது இரத்த அழுத்தம் கால்வீக்கம் இவற்றை உடனடியாகத் தேர்ந்து டாக்டர்களிடம் காண பிப்பது நல்லது. இதனால் 'Eclampsia' எனும் பேறுகால வலிப்புநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

4 'Valve Replacement' எனும் வால்வு மாற்றுச் சிகிச்சைப் பெற்றவர்கள் கொஞ்சம் முழுமையான அக்கறையுடன் முறையான மருத்துவமுறையைப் பின்பற்றுவது நல்லது.

5. 'Mitral Valve Commissurotomy' எனும் அறுவைச் சிகிச்சை மூலம் சுருக்கத்தைச் சீர் செய்து கொண்டவர்களுக்கு ஒழுங்கான சிகிச்சையும், பராமரிப்பும் இருந்தால் நல்ல சுகப்பிரசவம் உண்டாக (Normal Delivery) வாய்ப்புகள் அதிகம்.

6. இதயத்தில் வலதுபக்க அசுத்த இரத்த ஓட்டமும், இடது பக்க சுத்த இரத்த ஓட்டமும் கலந்து விடாமல் தடுப்புச் சுவர்கள் அமையப் பெற்றுள்ளது. இந்தத் தடுப்புச் சுவர்களில் பிறவியிலேயே ஒரு சிலருக்குச் சின்ன ஓட்டைகள் ஏற்பட்டு விடுகின்றன. (ASD, VSD). ஒருசிலருக்குச் சுத்த இரத்தத்தை எடுத்துச் செல்லும் மகா தமனிக்கும், அசுத்த இரத்தத்தை நுரையீரலுக்குக் கொண்டு செல்லும் இரத்தக் குழாயுக்கும் இடையே ஒரு சின்ன பாலமாக, இரு இரத்த ஓட்டங்களும் கலந்துவிட சிறுவழி அமைந்து விடும் (PDA). மேற்கூறிய அனைவரும் சிறு வயதிலியே இக்குறைகளைக் கண்டறிந்தால் அறுவைச்சிகிச்சை மூலம் முழுவதும் குணமடையலாம் தெரியாமல் திருமணம் செய்து பேறுகாலத்திற்கு வந்து விட்ட தாய்மார்கள் இதயத் தசை சீராகத் துடிக்க மருந்துகள் உட்கொண்டு, இன்னல்கள் குறைத்து சுகப்பிரசவம் காணலாம். ஆனால், மறுபிரசவத்திற்கு முன் அறுவைச் சிகிச்சைசெய்து கொள்வது அவசியம்.

7. அசுத்த இரத்தமும், சுத்த இரத்தமும் ஒன்றாக் கலந்து நீல நிறம் பாய்ந்த சிக்கலான இதய நோயாளிகள் பிரசவம் பற்றி மிகவும் சிந்திக்க வேண்டும். இதில் அதிகமாகக் காணப்படும் Tetialogy of Full of எனும் நான்கு வித அமைப்பு கோளாறுகள் கொண்ட இந்த நோயாளிகள் ஒரு சிலர் மருந்துகளும், அறுவைச் சிகிச்சையும் முறையாகப் பின்பற்றி பிரசவிக்கின்றனர். ஆனால், இரத்தக் குழாய்களின் மாற்றுத் தோற்றம், ஒரே ஒரு இடது இதய அறை, முளைக்காமலே, அழிந்த வால்வுகள் இப்படி பல சிக்கலான கோளாறுகளைக் கண்டவர்கள் பிரசவிக்காமல் இருத்தல் நல்லது.

தாய்மைக்கும், வாய்மைக்கும் என்றும் சோதனைதான், சாதாரணமாக, இளம் பிஞ்சுகளைச் சுமக்கின்ற தாய்மார்களுக்கு எவ்வளவு இன்னல்கள் இரத்தச் சோகை, சூழ்நிலையின் பாதிப்பால் ஏற்படுகின்ற நோய்கள் பாரம் பரிய பிறவிக் கோளாறுகள் இயற்கை தரும் வேதனை இவைகளைத் தாங்கி நிற்கின்ற தாய்மார்கள் தெய்வங்களை விடப் போற்றப்பட வேண்டியவர்கள். பேறுகாலத்தில் அவர்களுடைய நோய்களைத் தீர்க்க மனிதாபிமான கண்ணோட்டத்தோடு, கனிவுடன் நோக்குவது சமுதாயத்தின் கடமை. ●

அறிவு, வீரம், நிதானம், நேர்மை ஆகியவை நான்கும் நல்ல ஒழுக்கங்கள்.

—பிளேட்டோ

மாணவர்களிடையே சேவை உணர்ச்சி, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பது ஆசிரியர்களின் கடமை.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

சொற்சுவை, பொருட்சுவை, அணிநயம்,
பொருள்நயம் இவற்றுடன் இசை நுணுக்கம் மிகவே

# ஒப்புயர்வற்ற இசை வடிவம் படைத்த சீர்காழித் தமிழிசை மூவர்

முனைவர் திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம்

இசை என்றால் இசைய வைப்பது. செவி கேட்கும், தலை தாளமிடும்; தனி இசைக்கு இம் மட்டு. அதுவே தமிழ் இசை எனில், அந்த நல்லிசை நம் செவி வழி புகுந்து, சிந்தையில் அமர்ந்து, நெஞ்சகத்தை நெக்குருக வைத்து, விழி வழி நீர் சொரியச் செய்திடும். தமிழிசைக்கே இவ் வல்லமை உண்டு.

**இசைத் தமிழே உயிர் மூச்செனக் கொண்டு, கீர்த்தனைகளும் பதங்களும் பாடி தமிழுலகைப் பரவசப்படுத்தி தெய்வீக அருள் செய்த தமிழிசை மூவரின் இவ்வரலாற்றுக் கட்டுரையை எழுதியுள்ள முனைவர் திருப்பாம்புரம் சோ. சண்முக சுந்தரம் அவர்கள் பாரம்பரிய மிக்க இசைக் குடும்பத்தைச் சார்ந்தவர். தமிழிசையின் பெருமையை உலகுக்கு உணர்த்தி சிறப்புடன் வளர்த்து அதற்கு சீர்செய்ய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் பணி செய்து வருபவர். தற்போது, சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகின்றார்.**

### தென்னக இசையின் தாய் காரைக்கால் அம்மையார்

உலக இசை வரலாற்றிலேயே, நமக்குக் கிடைத்துள்ள ராக, தாள அமைப்புகளுடன் கூடிய உருப் படிகளுள் தொன்மையானதாக, தென்னக இசையின் தாயாக, விளங்குவது காரைக்கால் அம்மையாருடைய பாடல்கள் ஆகும். காரைக்கால் அம்மையார் பாண்டிநாட்டுக்கு வெளியே சோழநாட்டில் பிறந்து, தொண்டை மண்டலத்துத் திருவாலங்காடு சென்று நடராசர் மீது "நட்டபாடை" "இந்தளம்" என்ற பண்களில் இரு பதிகங்களைப் பாடியுள்ளார். இதனால்தான் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில், காரைக்கால் அம்மையார் அவர்களைப் பெருமைப்படுத்தி இனி அவர் 'தென்னக இசையின் தாய்' என்று அழைக்கப்படுவார் என்று கோடி மக்கள் கூட்டத்தின் நடுவே பிரகடனப் படுத்தினார். இவையே முதன் முதலாக சிலப்பதிகாரத்திற்கும் பரிபாடலுக்கும் பிறகு நமக்குக் கிடைக்கும் பண்கள். பரிபாடற் பண் வழக்கு மறைந்து விட்டது; இதன் காலம் 5-ஆம் நூற்றாண்டு ஆகும்.

அடுத்து, ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் சோழ நாட்டிலும் நடு நாட்டிலும் தோன்றிச் சிவனருள் பெற்று கணக்கற்ற பண்களை அருள்வெள்ளமாகப் பொழிந்துள்ளார்கள். இந்த இசை மரபுக்கு ஒட்டியவாறே 16-ஆம் நூற்றாண்டில் முத்துத்தாண்டவர் தமது கீர்த்தனை வடிவத்தை முதல் முதலில் அறிமுகப்படுத்தினார். நாயன்மார்கள், ஆழ்வார்கள் வகுத்தமைத்த வழியிலேயே இறைவனைத் துதிக்க பல்வேறு சொற்றொடர்களைத் தமது கீர்த்தனையில் முத்துத் தாண்டவர் கையாண்டுள்ளார்.

### இராகங்களின் வளர்ச்சிக்கு உதவியது தேவாரப் பண்களே!

தற்காலத்தில் வழங்கு பல இராகங்களுக்கு தேவாரப் பண்கள்தான் அடிப்படையாகும். தேவாரப் பாடல்கள் எல்லாம்

இசைவடிவங்களுடனேயே முதன் முதலில் உலகில் தோன்றின. செய்யுளாக முதலில் இயற்றப் பட்டுப் பின்னர் அவைகட்கு இசை வகுக்கப்படவில்லை. தேவாரப் பாடல்கள் சுரப்படுத்தி வைக்கப்படாமல் போயினும், குருசிஷ்ய பரம்பரை மூலமாக வும், ஓதுவார்கள் மூலமாகவும் அவைகளின் வர்ணமெட்டுகள் காப்பாற்றப்பட்டுள்ளன. பிற் காலத்தில், ராகங்களின் வளர்ச் சிக்குத் தேவாரப்பண்கள் மிக்க உதவியாய் இருந்தன.

இன்று 20-ஆம் நூற்றாண் டில் வழங்கிவரும் இசைக்கு முன்பு, ஒரே இசைதான் தமிழகத் தில் இருந்தது. தற்பொழுதுள்ள 'தென்னிந்திய இசை', 'கர்நாடக இசை', 'திராவிட இசை', 'இந்துஸ்தானி இசை', 'வடஇந்திய இசை', 'மேற்கிந்திய இசை', 'ஐரோப்பிய இசை' போன்ற பகுப்புகள் கிடையாது. இவைகள் எல்லாம் மிகவும் பிற்காலத்தில் பகுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திற்கும் மூல இசை தமிழிசைதான்.

இத்தகு பெருமைமிகு தமிழி சையைப் போற்றிப் பாதுகாத்திட வும், புகழ்ந்து வளர்த்திடவும் தொண்டு செய்த பெரியோர் பலர். அவர்களுள் எண்ணற்ற கீர்த்தனைகளும் பதங்களும் பாடி இறவாப் புகழ் கொண்ட வர்கள் அருள்மிகு முத்துத் தாண்டவர், அருள்மிகு மாரி முத்தாப்பிள்ளை, அருள்மிகு அருணாசலக்கவிராயர் என்னும் மூவர் ஆவர்.



**அருள்மிகு முத்துத்தாண்டவர்**


தென்னகத்தில் கிருதி, கீர்த்தனை மரபுக்கு வழிவகுத்தவர் அருள் மிகு முத்துத் தாண்டவர் ஆவார். இவர் சிதம்பரம் நடராசப் பெருமான்மீது எண்ணற்ற கீர்த் தனைகளையும் பதங்களையும் பாடியுள்ளார். இவரது பாடல்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை சங்கீத வித்வான் களால் அதிகமாகப் பாடப்பட்டு வந்தன. இவருடைய பதங்களும் அபிநயத்துக்கு மிகவும் சிறப்பு உடையனவாகக் கருதப்பட்டன.

அருள்மிகு முத்துத்தாண்ட வர் சோழவள நாட்டில் சீர்காழி என்ற சிவத்தலத்தில் கி.பி. 1600-க்கு முன்னர் தோன்றினார். இவருக்கு இளமையில் 'தாண்டவன்' என்ற பெயர்தான் வழங்கப் பட்டது. சிவநாமக் கீர்த்தனங் களைப் பிறர்பாட இவர் கேட்டு இன்புற்று வந்தார்.

வழக்கம் போல் ஒரு நாள் மாலை இவர் கோயிலுக்குச் சென்று தன் வழிபாட்டை

---

**தமிழிசை மூவரின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் வகையில், அம்மூவரின் திருவுருவங்களைத் தாங்கி, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தில் அணிவகுத்து வந்த அலங்கார ஊர்தி.**



## இசையின் வகை . . .

இசையின் வகை ஏழு ஆகும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பதாகும். இவற்றுள் இடத்தால் குரல், நாவினால் துத்தம், அண்ணத்தால் கைக்கிளை, சிரத்தால் உழை, நெற்றியால் இளி, நெஞ்சால் விளரி, மூக்கால் தாரம் இங்ஙனம் தனித்தனிப் பிறக்கும். இவையே ஏழ்சுரமெனவும் வீணையில் ஏழ்நரம்பெனவும் படும்.

இவற்றில் ஓசையுவமை மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை;

சுவையுவமை பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி;

வாசனையுவமை மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை;

அக்கரம் ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஔஉ;

மாத்திரை நான்கு குரல், நான்கு துத்தம், இரண்டு கைக்கிளை, மூன்று உழை, நான்கு இளி, மூன்று விளரி, இரண்டு தாரம்.

இவற்றால் ஏழு பாலை பிறக்கும். அவையாவன: குரலே குயிலாகுமானால் செம்பாலை, துத்தமே குரலாயின் படுமலைப்பாலை, கைக்கிளையே குரலாயின் செவ்வழிப்பாலை, உழையே குரலாயின் அரும்பாலை, இளியே குரலாயின் கொடிப்பாலை, விளரியே குரலாயின் விளரிப்பாலை, தாரமே குரலாயின் மேற் செம்பாலை. இவற்றுள் செம்பாலைக்கு கொடிப்பாலை வலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையும் மேற்செம்பாலையும் வலிது, அன்றியும் தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும், விளரியுல் கைக்கிளையும் பிறப்பது தகுதி.

இவற்றிற்கு இறைவர் விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன். இவற்றிற்கு உயிர் ஈசன்.

—பாளையங்கோட்டை வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம் வெளியிட்ட 'வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி' ஆய்வுப் பதிப்பிலிருந்து

நடத்தினார். களைப்பின் காரணமாக அங்கேயே படுத்து உறங்கினார். சிறிது நேரம் சென்றபின் விழித்தெழுந்த தாண்டவர், கோயில் குருக்களின் 10 வயது மகளைப் போன்ற ஓர் உருவத்தை அவர்முன் கண்டார். அப்பெண்மணி, தாண்டவரைத் தில்லையம்பதிக்குச் சென்று நடராசப் பெருமானை இன்னிசையால் வழிபடும்படிப் பணித்தாள். அதைக் கேட்ட தாண்டவர், என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருக்கும் போது, "நீ கூத்தப் பெருமான் திருமுன் வழிபாடு செய்யும் அன்பர் கூட்டத்திலிருந்து எச்சொல் முதன்முதலாக வெளிப்படுகின்றதோ அச்சொல்லையே முதலாக வைத்துப் பாடுக'' என்று கூறியபின் அந்தப் பெண்மணி மறைந்தாள். அப்போது தான் தாண்டவருக்கு உண்மை தெரிய வந்தது; தன்னிடம் பேசியது இறைவியே என்றறிந்து மகிழ்ந்தார். இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற மக்கள் இவருக்கு "முத்துத் தாண்டவர்'' எனப் பெயரிட்டனர்.

### "பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லால் வேறுண்டோ?"

முத்துத் தாண்டவர் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தொழுது நின்றார். அச்சமயம் அடியார் கூட்டத்திலிருந்து "பூலோக கயிலாசகிரி சிதம்பரம்" என்னும் தொடர் மொழி வெளிப்படவே அத்தொடரையே முதன்முதலாகக் கொண்டு, "பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லால் புவனத்தில் வேறும் உண்டோ?" என்ற கீர்த்தனையைப் பாடி முடித்தார். மிச்ரஜம்பை தாளத்தில் பவப்ரியா இராகத்தில் அமைந்த இப்பாடல் சிந்தையை உருக வைத்துவிடும். ஒவ்வொரு நாளும் இவ்வாறே முத்துத் தாண்டவர் பாடல்கள் இயற்றிப் பாடி வந்தார்.

ஒருநாள் இறையடியாரிடமிருந்து யாதொரு சொல்லும் வெளிப்படவில்லை. இருப்பி

னும் தன் கடமையிலிருந்து தவற விரும்பாதவராய், அப்பேச்சின் மையையே முதலாகக் கொண்டு "பேசாத நெஞ்சமே" என்ற பாடலைப் பாடினார். மிச்ர ஜம்பை தாளத்தில் சூரியகாந்தம் இராகத்தில் இப்பாடல் அமைந்து உள்ளது. பின்பு, ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கு வரும்பொழுது கொள்ளிடம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடி யது. தன்வழிபாட்டிற்கு இடை யூறு நேர்ந்ததை எண்ணிக் கலக்கமுற்று, கொள்ளிடக் கரை யிலேயே நின்று கொண்டு "காணாமல் வீணிலே காலம் கழித்தோமே" என்று பாடத் துவங்கினார். மிச்ர சாபு தாளத்தில் தன்னியாசி இராகத்தில் அமைந்துள்ளது இப்பாடல். இப் பாடல் தொடங்கியதும் வெள்ளம் குறைய ஆரம்பித்தது. ஆற்றைக் கடந்து கரையேறிக் களிப்பு நிரம்பியவராய் "தெரிசனம் செய்வனே" (வசந்தா - ஆதி) என்று பாடினார்.

**அருமருந்தொரு**
**தனிமருந்திது**
**அம்பலத்தில்**

பின் சிதம்பரம் அடைந்து, இறைவன் திருமுன் நின்று, "கண்டபின் கண் குளிர்ந்தேன்" (மலையமாருதம்) என்னும் பாடலைப் பாடி மகிழ்ந்தார்.

ஒருநாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கு வரும் இடைவழி யில் அவரைப் பாம்பொன்று தீண்டியது. சிறிதும் உள்ளம் கலங்காமல் "அருமருந்தொரு தனி மருந்திது அம்பலத்தில் கண்டேனே" (காம்போதி ரூபகம்) என்னும் பாடலைப்பாடி, விடம் நீங்கப் பெற்றார்.

இவ்வாறு பற்பல இசைப் பாடல்கள் பாடியும், அருஞ் செயல்கள் பல நிகழ்த்தியும் இறுதியில் ஆவணிப்பூச நன்னா ளில் இறைவன் திருமுன் நின்று, "மாணிக்க வாசகர் பேறெனக் குத் தரவல்லாயோ அறியேன்" (கோகிலப்பிரியா ரூபகம்)

## இராகங்கள் . . . இராகங்கள்

**இராகங்கள் முப்பத்திரண்டு. பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளரி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாராங்கம்**

**இவற்றுள்,**

பைரவி புருடஇராகம். பிராம்மணம். இதன் மனைவிகள் தேவக்கிரியை மேகவிரஞ்சி, குறிஞ்சி. அதிதேவதை ஈசன்,

பூபாளம் புருட இராகம், பிராம்மணம். இதன் மனைவிகள் வேளாவளி, மலகிரி, பௌளி. அதிதேவதை திருமால்.

சீராகம் புருட இராகம், க்ஷத்திரியம். இதன் மனைவிகள் இந்தோளம், பல்லதி, சாவேரி. அதிதேவதை சரசுவதி,

மடமஞ்சரி புருட இராகம், க்ஷத்திரியம். இதன் மனைவிகள் தேசி, இலலிதை, தோடி. அதிதேவதை இலக்குமி,

வசந்தம் புருட இராகம், வைசியம். இதன் மனைவிகள் இராமக்கிரியை, வராளி, கைசிகம். அதிதேவதை சூரியன்

மாளவி புருட இராகம், வைசியம். இதன் மனைவிகள் நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை நாரதன்.

பங்காளம் புருட இராகம். சூத்திரம். இதன் மனைவிகள் தன்னியாசி, காம்போதி, கௌளி. அதிதேவதை விநாயகன்

நாட்டை புருட இராகம், சூத்திரம். இதன் மனைவிகள் தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம். அதிதேவதை தும்புருவன்.

இவையன்றிப் பலவகைப்பட வழங்கும் இராகம் பலஉள. அவை கூறிற் பெருகும்.

**—வீரமாமுனிவர் அருளிய 'சதுரகராதி' நூலிலிருந்து**

என்னும் பாடலை மனம்விட்டுப் பாட சிதம்பரத்திலிருந்து பேரொளி யொன்று வெளிப்பட்டது. அருள் மிகு முத்துத்தாண்டவர் அப் பேரொளிப் பிழம்பில் இரண் டறக் கலந்தார்.

முத்துத் தாண்டவர் நூற்றுக் கணக்கான பாடல்களை இயற்றி உள்ளதாக நமக்குக் குறிப்புகள் உள்ளன. "தெருவில் வாரானோ" என்ற பதம் மற்றும் "ஆடிக் கொண்டார்", "சேவிக்க வேண்டு மையா", "ஆடின தெப்படியோ", "தெரிசித்தளவில்" முதலிய பாடல்கள் மிகவும் சிறப் பானவை. இவருடைய பாடல்கள் யாவும் கற்பவர், கேட்பவர் உள்ளங்களில் சிவபக்தியை விளைவிக்கும் ஆற்றல் கொண் டவை. மேலும், இவை சொற் சுவை, பொருட்சுவை, தொடை நயம், அணிநயம், பொர்ருள் நயம், இசை நுணுக்கம், எதுகை மோனை முதலிய நயங்களைக் கொண்ட ஒப்புயர்வற்ற இசை வடிவங்கள் ஆகும்.

அருள்மிகு முத்துத் தாண்டவர் இயற்றியுள்ள 60 கீர்த்தனைகள் திருப்பாம்புரம் N. சுவாமிநாத பிள்ளை அவர்களின் உதவி யுடன் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளன.

## அருள்மிகு மாரிமுத்தாப்பிள்ளை

முத்துத் தாண்டவரைப் போல் தில்லை நடராசப் பெருமான்மீது கீர்த்தனைகளும் பதங்களும் பாடிய மற்றோர் இசைப் புலவர் தில்லை விடங்கன் மாரி முத்தாப்



பிள்ளை. இவர் இளமையிலேயே பாடல்கள் எழுதும் ஆற்றல் பெற்றவர். 18-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த பெரும்புலவர் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர். இவர் பிறந்த ஆண்டு கி.பி. 1712.

இவர் தில்லை நடராசப் பெருமான் மீது மிக்க அன்பு உடையவராய் வாழ்த்துவந்த காலத்தில், இவருடைய மூத்தப் புதல்வர் தெய்வரங்கன் பெரு மாள் பிள்ளை அறிவு மழுங்கி குடும்ப நினைவு சிறிதுமின்றி அலைத்து திரியலானார். மாரி முத்தாப்பிள்ளை பெரிதும் கவலையடைந்தார். நடராசப் பெருமானை வருந்தி வேண்டி னார். நடராசர் இவரது கனவில் தோன்றி, "இவ்வூருக்கு ஒரு பிர பந்தம் இயற்றினால் உமது கவலை தீரும்" என்று கூறி மறைந்தார். பிள்ளையவர்கள் இறைவன் திருவருளை நினைந்து, வியந்து அவரை வழிபட்டு அவரிட்ட கட்டளைப்படி "புலியூர் வெண்பா" என்னும் நூலைப் பாடி முடித்தார். அவர்தம் மகனுக்கு நேர்ந்திருந்த மதி மயக்கமும் நீங்கியது.

## பழிப்பது போலப் புகழும் பாடல் திறனைக் காணீர்!

மேலும், இவர் சிதம்பரேசர் விறலிவிடுதூது, வருணாபுரி ஆதிமூலீசர் குறவஞ்சி, ஆதி மூலீசர் நொண்டி நாடகம், புலியூர்ச் சிங்காரவேலர் பதிகம், வியங்கேசர் பதிகம் ஆகிய வற்றையும் இயற்றியுள்ளார். இரத பந்தம் முதலிய சித்திரக் கவிகளும் படைத்துள்ளார். இவர் பாடிய கீர்த்தனைகள் நூற்றுக்கு மேற்பட்டவை; இவற் றில் 25 கீர்த்தனைகள் இன்று அச்சிடப்பட்டுள்ளன.

இவருடைய பாடல்கள் எல் லாம் சொற்பொருள் வளத் துடன் காணப்படுகின்றன. பழிப் பது போலப் புகழும் முறையில் இயற்றப்பட்டுள்ள "வீடும் அம்பலமாகி நீரும் அந்தரமானீர், வேளை பொல்லப்பாகியோ" (விலாசினி - சாபு); "என்ன பிழைப்புன்றன் பிழைப்பையா, இதை எண்ணிப் பார்த்தால் யார்க்கும் பழிப்பையா" (வேளாவளி - ஆதி) "உம்மைப் போல் ஆட்டையெடுத்து அம்பலத்தில் நிற்பார் ஒருவரைக் காணேன் ஐயா" (பாறுகீர்வாணி - ஆதி); "இன்னம் வயிரம் உன்றன் நெஞ்சிலேயிருப்பது என்ன காரணத்திற்கையா?" (ரத்ன காந்தி - ஆதி) என்று தொடங் கும் பாடல்களும், "எந்நேரமும் ஒரு காலைத் தூக்கிக் கொண்டு இருக்கிற வகை ஏதையா" (தோடி - ஆதி) என்னும் பாடலில் நடராசர் காலைத் தூக்கிக் கொண்டிருப்பதற்கு பலவாறு கூறும் காரணங்களும், "என்ன காரியத்துக்கு இந்தப் பேயாண்டி மேல் இச்சை கொண்டாய் மகளே" (தர்மாவதி - ஆதி) என இறைவனைக் கண்டு ஆசை கொண்ட மகளிடம் வெறுப்புத் தோன்றும்வண்ணம் ஒருதாய் கூறுவதாக அமைக்கப் பட்டிருக்

கும் பாடலும் படித்துப் பாடி இன்புறத் தக்கவையாகும். இசைப்பாடல்களில் இவ்வளவு பொருள் செறிவு மிக்க பாடல் களைக் காண்பது அரிது.

இந்தப் பாடலைப் பாடும் இசைவாணர்கள் சொற்கள் தெளிவாக விளங்கும்படி பாடிக் காட்ட வேண்டும். அப்போது தான் எல்லோரும் கேட்டு இன்புற முடியும். தமிழிசைப் பாடல்கள் இயற்றிய பண்டைய புலவர்கள் யாவரும் தாங்கள் கூறும் அடிப்படையில் அரிய கருத்துகளைப் பாடுவோரும் கேட்போரும் நன்கு அறிந்து, அறிவு முதிர்ச்சியும் அக மகிழ்ச்சியும் ஆன்ம வளர்ச்சியும் ஒருங்கே அடைய வேண்டு மென்று கருதியே பல சரணங் களை அமைத்துள்ளார்கள்.

**ஏதுக்கித்தனை மோடிதான் உனக்கு எந்தன் மேல் ஐயா!**

"ஒருக்கால் சிவசிதம்பரம்" (ஆரபி - ஆதி) என்ற பாடலில் சிவசிதம்பரம் என்று ஒருமுறை சொன்னால் பாவபந்தத்தி லிருந்து விடுபட்டு முத்தி அடையலாம் என்று கூறுகிறார். "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே" (யதுகுலகாம்போதி - ஆதி) என்ற பாடலில் நந்தி, நாரதர் போன்றவர்கள் யாழ், மத்தளம் போன்ற இசைக் கருவிகளைக் கையாண்டவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

"ஏதுக்கித்தனை மோடி தான் உனக்கு எந்தன் மேலையா" (சுருட்டி ரூபகம்) என்ற பாடலில் வேடிக்கையாக பேசியதற்காக நடராசர் தன்னைக் கடிந்து கொள்ளாதிருக்க வேண்டும் என்று மாரிமுத்தாப்பிள்ளை வேண்டுகிறார்.

இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட பாடல்களை இயற்றிய மாரிமுத்தாப்பிள்ளை கி.பி. 1787 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 14-ஆம் நாள் இறைவனின் இணையடி இணைந்தார்.

இராமநாடகக் கீர்த்தனைகள் இயற்றிய சீர்காழி அருணாசல கவிராயரும் இவரும் ஒரு காலத் தவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பரம்பரையில் தோன்றிய ஐயாத்துரைப் பிள்ளை என்பவர் ஓர் அருந்தமிழ்ப்புலவர். இவருக் குப் பின்வந்த வேலுசாமிப் பிள்ளை என்பவர் மாரி முத்தாப் பிள்ளையினுடைய நூல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார். இவர் வெண்பாப்புலி என்ற பட்டயம் பெற்றவர். இவருடைய திருமகனார் திரு T.V. மெய்கண்டார் என்பவர் இன்று சென்னை, நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். அச்சில் வெளிவராத இவரது பாடல்கள் சிலவற்றை வெளிக் கொணர் வதற்கு, சென்னை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி முயற்சி மேற் கொண்டுள்ளது.

மாரிமுத்தாப்பிள்ளையவர்கள் இயற்றிய சில பாடல்கள் புல்லாங்குழல் திருப்பாம்புரம் N. சுவாமிநாதப் பிள்ளை அவர் களின் உதவியுடன் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

**அருள்மிகு**
**அருணாசலக் கவிராயர்**



மயிலாடுதுறைக்கு அருகே தில்லையாடி என்னும் சிற்றூரில் நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியினருக்கு கி.பி. 1711-ஆம் ஆண்டு மகவாகப் பிறந்தார் அருணாசலக் கவிராயர்.

இளமையிலேயே பெற்றோர் காலமாகிவிட்டதால், இவர் தம் தமையன்மார் பாதுகாவலில் வளரலானார். தக்க முறையில் சிறிது காலம் கல்வி பயின்று, பின்னர், சீர்காழிக்கு அருகில் உள்ள மாயூரத்தை அடுத்த தருமபுரம் சென்று பல ஆண்டுகள் அங்கு தங்கி தமிழ் இலக்கிய இலக்கணத்திலும் சமய நூல்களிலும் தக்கப் புலமை பெற்றார். இவருக்குத் தமிழறிவு புகட்டிய முக்கிய ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர் என்னும் ப்ண்டார சந்நிதிகளே ஆகும். 12 ஆண்டுகள் சைவ மடத்திலிருந்து கல்வி பயின்ற பின் தம் ஊர் திரும்பினார்.

**திருக்குறளையும் இராம காதையையும் இன்னிசையோடு பரப்பினார்**

இவர் தமது 30-ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். காசுக்கடை வைத் துப் பொருள் ஈட்ட முயன்று 12 ஆண்டுகள் தில்லையாடியிலும் 25 ஆண்டுகள் சீர்காழியிலும் வாழ்த்து வந்தார்.

இவர் கற்ற தமிழ் நூல்களில் இவரது உள்ளத்தைக் கவர்ந்

தவை திருக்குறளும் கம்ப ராமாயணமும் ஆகும். இராமாய ணம் கல்லாருக்கும் கற்றவர்க்கும் இன்பம் கொடுக்க வல்லது என்று உணர்ந்து அந்த நூலை அழுத்தமாகப் பயின்றும் பல ருக்குக் கற்பித்தும் இன்னிசை யோடு பிரசங்கித்தும் வந்தார்.

அருணாசலக் கவிராயர் இயற்றியவை அசோமுகி நாடகம், சீர்காழித் தலபுராணம், சீர்காழிக் கோவை, அநுமார்ப் பிள்ளைத்தமிழ், இராமநாடகக் கீர்த்தனைகள் ஆகியனவாகும். இவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்தது "இராம நாடகக் கீர்த்தனைகள்" இசைநாடக நூலாகும். இதனுள் இசைப் பகுதிகள் 258 உள்ளன; 'தரு' என்ற இடைவடிவம் 197 தடவைகள் கையாளப்பட்டு உள்ளன. இரண்டடிக் கண்ணி களால் ஆன "திபதை" என்ற பெயர் கொண்ட இசைப்பாட்டு 60 தடவைகள் கையாளப் பட்டுள்ளன. மற்றும் கடவுள் வணக்கத்தைக் குறிக்கும் தோடை யும் நான்கடி கொண்ட விருத்தப்பாட்டு ஆகிய இசை வடிவங்களும் கையாளப்பட்டு உள்ளன. இந்நூலில் காணப் படும் மொத்த விருத்தங்கள் 268 மற்றும் கொச்சகம், வெண்பா, கலித்துறை போன்ற இசைப் பாடல்களும் காணப்படுகின்றன. இந்நூலில் ஆசிரியர் 40 இராகங் களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் சில: அசாவேரி, கல்யாணி, சாவேரி, தோடி, சங்கராபரணம், மத்தியமாவதி, மோகனம், பைரவி, ஆனந்த பைரவி, புன்னாகவராளி, நாட்டக்குறிஞ்சி, பிலஹரி, சௌராஷ்டிரம் முதலியன. அபூர்வ இராகங்களாகிய துவிஜாவந்தி, மங்களகைசிகம், சைந்தவி ஆகியனவற்றையும் பயன்படுத்தியுள்ளார். ஆதி, சாபு போன்ற பல தாளங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

இராமாயணத்தைச் செய் யுளாகச் செய்த கம்பர் அரங் கேற்றம் செய்த இடமான திருவ ரங்கத்திலேயே தானும் இராம நாடகக் கீர்த்தனைகளை அரங் கேற்றம் செய்ய ஆவல் கொண்டார் கவிராயர். முதலில் கோவில் அதிகாரிகள் மறுத்து விட்டனர். பின்னர், அரங்க நாதனின் துணையைக் கொண்டு அருணாசலக் கவிராயர் தமது நூலை அரங்கேற்றுவித்தார்.

அருணாசலக் கவிராயர் இராமநாடகத்தைப் பாடி முடித் தது தமது 60-ஆவது வயதில். தமிழ்நாடு முழுவதும் இராம கதையை இனிமையான தமிழிசை யில் பாடிச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த கவிராயர் கி.பி. 1779-ஆம் ஆண்டு தமது

## இராகத் தகுதிகள் . . .

**இராகத் தகுதிகள் நான்கு ஆகும். அவை இடம், செய்யுள், குணம், காலம் ஆகியவை ஆகும்.**

**இவற்றில், இடம் பற்றிய இராகம் ஐந்திணை இராகம்;**

**செய்யுள் பற்றிய இராகத் துள் வெண்பா இராகம் சங்கராபரணம்; அகவல் இராகம் தோடி; கலியிராகம் பந்துவராளி; கலித்துறை இராகம் பைரவி; தாழிசை யிராகம் தோடி; விருத்த இராகம் கலியாணி, காம்போதி, மத்தியமாவதி; உலா இராகம் சௌராட்டிரம்; தோடையவிராகம் சௌராட் டிரம், நாட்டை; மங்கள இராகம் மங்கள கௌசிகம்; தேவார இராகம் பூபாளம்; பிள்ளைக்கவி இராகம் கேதாரகௌளம்; பரணி இராகம் கண்டாரவம்.**

**குணம் பற்றிய இராகத் துள் இரக்கத்திற்கு ஆகரி, கண்டாரவம், நீலாம்புரி, பியாகடம், புன்னாகவராளி; துக்கத்திற்கு இரக்கராகங் களன்றி வராளியின் மேலாம்; மகிழ்ச்சி இராகம் காம்போதி, சாவேரி, தன்னியாசி, யுத்த இராகம் நாட்டை,**

**காலம் பற்றிய இராகத் துள் வசந்தகாலம் விராகம், காம்போதி, அசாவேரி, தன்னியாசி; அன்றியும் மாலை இராகம் கலியாணி, காபி, கன்னடம், காம்போதி; யாம இராகம் ஆகரி; விடியல் இராகம் இந்தோளம், இராமமலி, தேசாட்சரி, நாட்டை, பூபாளம்; உச்சி இராகம் சாரங்கம், தேசாட்சரி, அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமகவி சாரங்கம் பூபாளம் நீக்கிநின்ற மற்றவை எக் காலத்தும் பொதுமைய.**

***—வீரமாமுனிவர் அருளிய 'சதுரகராதி' நூலிலிருந்து.***

# தமிழகப் பளு தூக்கும் வீரர்கள் உலகப்போட்டியில் பங்கேற்க மாண்புமிகு முதல்வர் நிதிஉதவி.

உலக ஆண்கள் பளு தூக்கும் சாம்பியன் பட்டத்திற்கான (Men's Open World Power Lifting Championship) போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரண்டு வீரர்கள் திரு வி.சேவியர் மற்றும் ஆர்.மோகன கிருஷ்ணன் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் செலவுத் தொகையை வழங்கிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டு, பின்லாந்து நாட்டில் இம்மாதம் 14-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடக்க உள்ள உலக ஆண்கள் பளுத் தூக்கும் பட்டத்திற்கான போட்டியில் இவர்கள் இருவரும் கலந்து கொள்ளுவதற்கு ஏதுவாக ஒவ்வொருவருக்கும் தலா 66,000 ரூபாய் வீதம் மொத்தம் 1,32,000 ரூபாயை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்கள். அந்த ஆணைப்படி அவர்களுக்குத் தலா 66,000 ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த இரு வீரர்களும், உலக அளவிலான பளு தூக்கும் போட்டியில் வெற்றிகளைப் பெற்று தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் புகழையும் பெருமையையும் சேர்க்க வேண்டும் என்ற தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

உலக ஆண்கள் பளு தூக்கும் போட்டியில் கலந்து கொள்வதற்காக, திரு.வி.சேவியரும், ஆர்.மோகன கிருஷ்ணனும் தற்போது பின்லாந்து நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள்.

---

67-ஆவது வயதில் இறைவன் திருவடி நிழலை எய்தினார்.

இவருடைய பாடல்கள் பல அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினரால் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன.

**ஆண்டுதோறும் நடக்கும் அருமைமிகு பெருமைமிகு விழா!**

தமிழிசை வளர்த்த தனிப் பெரும் தகைமையோரான இம் மூவரைப் போற்றி, ஆண்டு தோறும் சீர்காழித் திருத்தலத்தில் தமிழக அரசால் தமிழிசை மூவர் விழா சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, தமிழிசை வளர்க்கும் தொண்டாகக் கருதி மூன்று நாட்கள் இவ்விழாவை, சீர்காழி அருள்மிகு சட்டைநாதர் திருக்கோயிலில் நடத்தி வருகிறது. இசை வல்லுநர்களின் இசை நிகழ்ச்சிகள், இசைக் கல்லூரி மாணவியரின் பரத நாட்டியக் கலை நிகழ்ச்சிகள், இசைக் கல்லூரி மாணவர்களின் வாய்ப்பாட்டு, புல்லாங்குழல் முதலான இசைக் கருவிகளோடு இசைக்கும் நிகழ்ச்சிகள், நாதசுர இசைக் கச்சேரிகள் முதலான பல்வேறு நிகழ்ச்சிகளுடன் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் இசை வழிபாடாகவே இதனை நடத்தி வருகிறோம்.

இத்தகு சிறப்புமிகு தமிழிசை வர்ணமெட்டுகளிலேயே பிற்காலத்தில் வந்த பிறமொழிப் பாடல்கள் இயற்றப்பெற்றன. எடுத்துக்காட்டாக, தியாகராஜர், தீட்சதர், சியாமா சாஸ்திரி ஆகியோரின் உருப்படிகளில் தேவார வர்ண மெட்டுகளும் அருணகிரிநாதரின் சந்த அமைப்பும் விரவி இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் சந்தேகமற நிரூபித்து உள்ளார்கள்.

இன்றைய வளரும் தலைமுறையினர் மரபுமிக்க நம்முடைய இசைக்கலையின் வளத்தினையும் செறிவையும் நுணுக்கங்களையும் உணர்ந்தால், தமிழிசை மேலும் மிளிரும்.

# டான்பெட் - உழவர்க்கு ஒரு சேவை நிறுவனம்

'டான்பெட்' என அனைவர்க்கும் அறிமுகமான 'தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்' இரசாயன உரம்-பூச்சி மருந்துகள் - விதை வேளாண் கருவிகள் ஆகிய விவசாய இடுபொருட்களை உழவர்க்கு வழங்குதல், உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்யும் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல் போன்ற துறைகளில் 1959-ஆம் ஆண்டு முதற் கொண்டு தமிழகத்தில் செயலாற்றி வருகின்றது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

☆ தொடக்கக் கூட்டுறவு விவசாய வங்கிகளில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டு வேளாண் உற்பத்தியினைப் பெருக்கி வரும் விவசாயிகளின் இடுபொருள் தேவையறிந்து, அவற்றினைத் தேவையான அளவு இருப்பு வைத்து உரிய நேரத்தில் வழங்குதல்;

☆ இணையத்தில் அங்கம் வசிக்கும் உறுப்பினர் சங்கங்களுக்கு விளை பொருட்களைக் கொள்முதல் செய்வதிலும், அவற்றினைச் சேமிப்பு வைத்து விற்பனை செய்வதிலும் உதவி புரிதல்;

☆ அழுகுந்தன்மை கொண்ட விளைபொருட்களுக்கும் விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கும் உகந்த சேமிப்பு வசதியினைச் செய்து தருதல்;

☆ வேளாண் இடுபொருட்களான மணியுரம் - கலப்புரம் - தரமான விதை போன்றவற்றினைத் தயாரித்தளித்தல்.

**இடுபொருள் விற்பனை உர விநியோகம்**

தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரதமக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக உரம் முதலான

**எஸ். தாமோதரன்**
**கூடுதல் பதிவாளர் - தனி அலுவலர்**
**தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்**

வேளாண் இடுபொருட்கள் அனைத்தும் 'டான்பெட்' மூலம் விநியோகிக்கப்படுகின்றன. தஞ்சை மற்றும் காயிதே மில்லத் மாவட்டங்களில் மட்டும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் இப்பணிகளை ஆற்றுகின்றன.

கடந்த 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 16,277.00 இலட்சம் மதிப்பு கொண்ட 3,50,962 டன் அனைத்து வகை உரங்களை 'டான்பெட்' வழங்கியது. நடப்பு ஆண்டான 1995-96-இல் செப்டம்பர் '95 முடிந்த முதல் ஆறு மாதங்களில் இதுவரை ரூ. 9531.60 இலட்சம் மதிப்பு கொண்ட 1,83,366 டன் அனைத்து வகை உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**உர உற்பத்தி**

"என்.பி.கே. இரசாயனச் சத்துக்களின் சரியான சேர்க்கையோடும் வேப்பம் பிண்ணாக்கு போன்று அத்தியாவசியக் கலவையுடனும் பாமணி 17:17:17 எனும் மணி உரத்தினை 'டான்பெட்' தயாரித்து அளித்து வருகிறது. மன்னார்குடியின் அருகாமையில் அமைந்துள்ள பாமணி எனும் ஊரில் அமையப் பெற்ற டான்பெட்டின் பாமணி உர ஆலை ஆண்டொன்றிற்குச் சுமார் 30,000 டன் அளவு உரத் தயாரிப்பு செய்யும் திறன் கொண்டதாகும். இவ்வாலையில் கடந்த 1994-95-ஆம் ஆண்டு 18,025 டன் அளவிற்கு உரம் தயாரிக்கப்பெற்று ரூ. 1337.73 இலட்சம் மதிப்புள்ள 22,048 டன் உரம் விநியோகிக்கப்பட்டது. நடப்பாண்டின் (1995-96) முதல் அரையாண்டில் இதுவரை 10718

டன் அளவு பாமணி உரம் தயாரிக்கப்பெற்று ரூ. 817.48 இலட்சம் மதிப்புக் கொண்ட 11,888 டன் அளவு விநியோகிக் கப்பட்டுள்ளது.

**வேளாண் சிறப்பங்காடிகள்**

அனைத்து விவசாய இடு பொருட்களும் ஓர் அமைப்பின் கீழ் வழங்கப்படல் அவசியம் என்று அறிந்து இதற்கான வேளாண் சிறப்பங்காடிகளை அமைத்துத் தரும் வேலை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் 'டான் பெட்' வசம் அளிக்கப் பெற்றது.

மேற்சொன்ன வேளாண் சிறப்பங்காடிகள் நன்கு இயங்க வேண்டி, உரிய முறையில் உரம் சேமித்து வைக்க வேண்டி தரை விரிப்புகள், பெயர்ப் பலகைகள், விலைப் பட்டியல் பலகைகள், விளம்பரப் பதாகைகள், மர அடுக்குச் சட்டங்கள், சைக்கிள் ஊர்திகள், விற்பனை ஊழியர்க்குச் சீருடைகள் ஆகிய வற்றினை 100 பிரதமக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள 100 வேளாண் சிறப்பங்காடிகளுக்கு அமைத்து 'டான்பெட்' வழங்கி யுள்ளது. மேலும், இச் சிறப்பங் காடிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சென்னை மற்றும் மதுரையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் உரிய பயிற்சி வழங்கவும் தீர்மானிக்கப் பெற்றுள்ளது. போதிய அளவு உரம் - விதை- பூச்சிமருந்துகள் வேளாண் கருவிகள் ஆகியன இவ்வங்காடி களில் இருப்பில் வைப்பதற்கு ஆவன செய்யப் பெற்றுள்ளது. மேலும், இதுபோன்ற 100 சிறப்பங்காடிகளை உருவாக் கவும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.


**வேளாண் விளைபொருள் விற்பனை**

வேளாண் விளைபொருள் விற்பனை இணையமான இந்த நிறுவனம் பருத்திப்பஞ்சு, மிளகாய் வத்தல், கொத்து மல்லிவிதை, பயறுவகை போன்ற பொருட்களையும் மற்றும் ஓரளவிற்கு எண்ணெய் வித்துக்களையும் கொள்முதல் செய்து வருகிறது. விவசாயி களுக்கு விற்பனைச் சந்தையில் நல்லாதரவு நல்குவதே டான் பெட்டின் தலையாய நோக்க மென்பதால், கூட்டுக் கொள் முதல் முகவர் அடிப்படைக் கொள்முதல் எனும் அனைத்து வகைகளிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.

கடந்த 1994-95-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பெற்ற குறியீடான ரூ. 2777.00 இலட்சத் தினையும் தாண்டி, மொத்தம் ரூ. 3974.65 இலட்சம் அளவிற்கு 31,229 டன் விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பெற்ற. நடப்பாண்டான 1995-96-இன்

பாமணி 17:17:17 என்னும் மணி உரங்கள்





**கோயம்பேடு புதிய குளிர்ப்பதனச் சேமிப்பகம்**

முதல் அரை ஆண்டில் மொத்தம் ரூ. 1589.53 இலட்சம் மதிப்பு கொண்ட 15748 டன் விளைபொருட்கள் இதுவரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

### பூச்சிக்கொல்லி மருந்து, விதை மற்றும் விவசாயக் கருவிகள் விநியோகம்

உர விநியோகம் போன்றே பூச்சிக்கொல்லி மருந்து போன்ற பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளையும் மற்றும் விதை வேளாண்கருவிகள் ஆகிய வற்றினையும் விவசாயிகளின் தேவைக்கேற்ப பிரதமக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக இணையம் விநியோகித்து வருகிறது. இவ்வகையில் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.17.95 இலட்சம் மதிப்பளவிற்கு விதைகளையும், ரூ. 357.53 இலட்சம் அளவிற்குப் பூச்சிமருந்துகளையும், ரூ. 1.56 இலட்சம் அளவிற்கு வேளாண்கருவிகளையும் 'டான்பெட்' விநியோகித்தது. நடப்பாண்டில் மேற்படிப் பொருட்கள் முறையே ரூ 12.17, இலட்சம் ரூ. 62.12 இலட்சம், ரூ. 1.30 இலட்சம் அளவிற்கு முதல் ஆறு மாதங்களில் விநியோகிக்கப் பெற்றுள்ளன.

### குளிர்ப்பதனச் சேமிப்பகம்

சென்னையில் பேசின்பாலம் சாலையில் அமைந்துள்ள டான்பெட்டின் குளிர்ப்பதனச் சேமிப்பகம் தனது முழு சேமிப்புத்திறனான 1250 டன் கொள்ளளவில் 50 விழுக் காடுகள் அளவிற்குத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது, மீதமுள்ள 50 விழுக்காடு கொள்திறன் கொண்ட ஓர் அறையினைப் புதுப்பிக்கும் பணியும் இதற்கு முன்னர் இயங்கி பழமை யடைந்து போன பனிக்கட்டித் தொழிற்சாலை இருந்த அறையினைச் சுமார் ரூ 26 இலட்சம் மதிப்பில் குளிர்ப்பதன சேமிப்பறையாக மாற்றியமைக்கும் வேலையும் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

இக்குறைவான உபயோக நிலையிலும் இவ்விஞ்ஞான ரீதியான இச்சேமிப்பக வசதி பற்றி நன்கறிந்துள்ள வணிகப் பெருமக்களில் நல்லாதரவு ஆர்வம் காரணமாகச் சிறப்புற இயங்கி வருகிறது. கடந்த 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 17.40 இலட்சமும், நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் இதுவரை ரூ. 8.91 இலட்சமும் வருமானமாக ஈட்டித் தந்துள்ளது இக்குளிர்ப்பதனச் சேமிப்பறை.

### கோயம்பேடு புதிய குளிர்ப்பதனச் சேமிப்பகம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரால் உருவாக்கப்பட்டு வரும் கோயம்பேடு மொத்த விற்பனை

வளாகத்தில் 2500 டன் கொள்ளளவு கொண்ட புதிய குளிர்ப்பதன் நிலையம் ஒன்றினை 'டான்பெட்' உருவாக்கி தற்போது இயக்கி வருகிறது. இச்சிறப்புமிகு நிலையம் தமிழ்நாடு அரசு மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக ஒப்புதலுடனும் நிதியுதவியுடனும் மொத்தம் ரூ. 198.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

1. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகக் கடனுதவி ரூ. 44.00 இலட்சம்.

2. தமிழ்நாடு அரசு பங்குத் தொகை உதவி ரூ. 55.00 இலட்சம்.

3. 'டான்பெட்' பங்கு ரூ. 47.75 இலட்சம்.

4. உணவுப் பொருள் பதப் படுத்துத் தொழில் அமைச்சகம் (மத்திய அரசு) நிதியுதவி ரூ. 52.00 இலட்சம்.

ஆக மொத்தம் ரூ. 198.75 இலட்சம்.

இப்புதிய குளிர்ப்பதன நிலையம் கடந்த மே'95இல் இருந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடங்கி முதல் ஐந்து மாதங்களில் 74 விழுக்காடுகள் அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வரை வாடகை வருமானமாக ரூ. 13.29 இலட்சம் ஈட்டப் பட்டுள்ளது.

### சேமிப்பு வசதி

'டான்பெட்' டிடம் விற்பனைப் பணிகளுக்கெனச் சேமிப்பு வசதிக்காக 26,560 டன் கொள்ளளவுக் கொண்ட 36 சொந்தச் சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. இவை முழுமையாகப் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

### மண்ணெண்ணெய் விநியோகம்

'டான்பெட்' வசம் சிறிய அளவிலான மண்ணெண்ணெய் கொள்கலன் நிலையம் ஒன்று சென்னையில் உள்ளது. கடந்த 1994-95-ஆம் ஆண்டு ரூ. 73.78 இலட்சம் பெறுமானமுள்ள 2985 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் ரூ. 37.23 இலட்சம் மதிப்பு கொண்ட 1505 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளது.

### வர்த்தக அளவு

தனது அனைத்து நடவடிக்கைகளிலும் குறிப்பாக இடுபொருள் விநியோகத்தில் சமீப கால ஆண்டுகளில் 'டான்பெட்' குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

## 42-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழா

**14.11.1995 கூட்டுறவு மறு பதிப்புகளின் மறுவடிவு நாள்**

**15.11.1995 கூட்டுறவுப் பயனுறுதி நாள்**

**16.11.1995 கூட்டுறவு விற்பனை, செயல்முறைப்படுத்துதல் மற்றும் நுகர்வோர் நாள்**

**17.11.1995 கூட்டுறவுக் கடன், சேமிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி நாள்**

**18.11.1995 கூட்டுறவு வீட்டுவசதி, மற்றும் கூட்டுறவுச் சேவைகள் நாள்**

**19.11.1995 மகளிர், இளைஞர்கள் மற்றும் நலிவுற்றோர் கூட்டுறவு நாள்**

**20.11.1995 கூட்டுறவு இயக்கத் தலைமைத் தன்மை நாள்**



# மீன்வள மேம்பாடு


லால் ரானா சைலோ, இ.ஆ.ப.,

மீன்துறை ஆணையாளர்


**மீ**ன்வளத்துறை, ஊரக வேலைவாய்ப்பை அதிகரித்தல், புரதம் மிகுந்த மீன் உணவைப் பெருக்குதல் மற்றும் அன்னியச் செலாவணியை அதிகரித்தல் ஆகியவற்றில் முக்கியப் பணி யாற்றுகின்றது.

தமிழ்நாடு, 1000 கிலோ மீட்டருக்கு மேல் நீளமுடைய கடற்கரையைப் பெற்றுள்ளது. சுமார் 41,412 சதுரக் கிலோ மீட்டர் கடற்படு நீளத் தொடரைக் கொண்ட மாநிலக் கடற்கரை முழுவதும் கடல் மீன்வளம் பெருக நிறைய வாய்ப்புகள் உள்ளன. தமிழகத்தில் பெரும் நீர்த்தேக்கங்கள் ஏரி, குளம், உவர்நீர்க் கழிமுகங்கள் முதலியன உள்நாட்டு நீர்நிலைகளில் 3.71 இலட்சம் எக்டேர் பரப்பு மீன் வளர்ப்பதற்கு உகந்ததாக உள்ளது. தமிழகக் கடலோரத்தில் மொத்தம் 442 கடல் மீனவக் கிராமங்கள் உள்ளன. மொத்தமுள்ள சுமார் 5.22 இலட்சம் மீனவ மக்களில் 3.02 இலட்சம் பேர் தீவிர மீன்பிடிப்பிலும், 77,425 பேர் உள்நாட்டு மீன்பிடிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், ஊரக வேலைவாய்ப்பை உருவாக்கவும் பல நலத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாடு திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றியதில் மீன் உற்பத்தியில் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. 1992-93-இல் உற்பத்தி 4.06 இலட்சம் டன்களாக இருந்தது. 1993-94-இல் 4.25 இலட்சம் டன்களாக இருந்தது. 1994-95-இல் 4.38 இலட்சம் டன்களாக இருந்தது.

தற்போது சுமார் 7,195 விசைப்படகுகளும், இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்களும் தவிர, ஏறக்குறைய 24,367 இயந்திரம் பொருத்தப் படாத நாட்டுப் படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன.

**மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களுக்குக் கடன் வசதி அளித்தல், மீன்பிடிக் கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றை விநியோகம் செய்தல் ஆகியவை களோடு அவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பனை செய்யவும் உதவுகிறது. அவைகளில் சில அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. தமிழ்நாட்டில் தற்போது 775 பதிவு பெற்ற மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமை மாநில மீனவர் கூட்டுறவு இணையம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இவற்றில் 3,02,254 மீனவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனமாக அரசு நிதி உதவி அளிக்கின்றது. நிதி உதவி வங்கிகளிலிருந்து கடன்பெறும் சக்தியை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகரிக்கச் செய்வதுதான், அரசு, பங்கு மூலதன உதவி செய்வதன் நோக்கமாகும்.

கடலோரப் பகுதிகளில் உள்ள கடல் மீனவர்களின் மேம்பாட்டிற்காக ஒரு புதிய திட்டம் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

கடலோர மீனவ ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு வகையான

மீன்பிடிக் கலன்கள், (கட்டு மரங்கள் மற்றும் படகுகள்) வலைகள், குளிர்சாதனப் பெட்டிகள், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் ஆகியவை வழங் கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் மீனவர் களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களி டையே சிக்கனம் மற்றும் சேமிக் கும் பழக்கத்தை உண்டு பண்ணவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், பிடிக்கப்படும் மீன் களின் விற்பனைத் தொகை களில் அதிக அளவில் பங்கு பெறவும் இத்திட்டம் தமிழ் நாட்டிலுள்ள 5 கடலோர மாவட்டங்களான செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், காயிதே மில்லத், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகியவற்றில் 34 ஆரம்ப மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயலாக்கப்படும். இத்திட்டத் தின் மூலம் 6,050 மீனவர்கள் நேரிடைப் பயனாளிகளாக அமைவர்.

இத்திட்டத்தின் மொத்தத் தொகை 1588.20 இலட்சமாகும். இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலம் அமலாக் கப்படும். இந்தத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் 6.11.91-இல் பதிவு செய்யப் பட்டது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ.1449.67 இலட்சம் கடனாகவும், ரூ.67.44 இலட்சத்தை மானியமாகவும் வழங்கியுள்ளது. இதனைத் தமிழக அரசு ரூ.786.66 இலட்சம் கடனாகவும், ரூ.458.38 இலட்சம் பங்குத் தொகையாகவும் ரூ.343.16 இலட்சம் மானிய



## கிராமங்களுக்கு மேலும் 20 ஆயிரம் தெரு விளக்குகள்

# ரூ.7 கோடி ஒதுக்கி முதல்வர் ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும், ஏற்கெனவே சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக தெரு விளக்குகள், ஊரக வளர்ச்சித் துறையினராலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத் துறையினராலும், அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக மொத்தம் 1,23,018 தெரு விளக்குகள் கடந்த 31.7.1995 வரை சுமார் 30 கோடி ரூபாய் செலவில் இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இத்திட்டப் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இப்பணி முடிவு பெறாமல் உள்ள இடங்களில் உடனடி யாகத் தெரு விளக்குகள் அமைத்துத் தரத்தக்க நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இத்திட்டம் நிறைவேற்றப் படாத பகுதிகளில் மொத்தம் 20,000 தெரு விளக்குகள் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, அதற்காக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். இவற்றில், 10,000 தெரு விளக்குகள் ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாகவும், மீதி 10,000 தெரு விளக்குகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாகவும், விடுபட்ட கிராமங்களில் அமைத்துத் தரப்படும்.

**பெரிய மனிதன்.**

அந்தஸ்தில் குறைந்தவனைப் பெருந் தன்மையுடன் நடத்துபவன்தான் உண்மையான பெரிய மனிதன்.

—கார்லைல்

**வெற்றியின் ரகசியம்.**

அன்பு, மென்மை, உறுதி, தூய்மை, பொறுமை ஆகிய ஐந்து குணங்களும் நிரம்பப் பெற்றவனே வெற்றிகரமான மனிதன்.

—கதே

மாகவும் தலைமை மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலம், பிரதம மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது.

தொடக்கத்தில் அரசு இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வழி முறை முன்பணமாக ரூ.362.42 இலட்சம் வழங்கி உள்ளது. இத்திட்டம், 1992-93 முதல் 5 ஆண்டுகள் செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின் இரண்டாவது ஆண்டில் செயல் படுத்த அரசு ரூ.301.89 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த கடன் மீன் வள மேம்பாட்டுத் திட்டத்தினை இதரக் கடலோர மாவட்டங் களிலும் செயல்படுத்த இத் திட்டத்தின் இரண்டாம் தொகுதி ரூ.48 கோடி செலவில் செயல் படுத்த கருத்துரு அரசின் பரிசீல னையில் உள்ளது.

தமிழ்நாட்டில் 111 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன. அவைகளின் முக்கியப் பணி களாக மீன் விற்பனை செய்யும் பொருட்டு கடன் உதவி செய்து வருதல், கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பயிற்சியளித்தல், நியாய விலைக் கடைகள் மூல மாக அத்தியாவசியப் பொருட் களை விற்பனை செய்தல், வேலைவாய்ப்பு அளித்தல் ஆகி யவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1993-94-ஆம் ஆண்டில் இந்த மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30,000 மூங்கில் கூடைகள் வழங்க ரூ.10 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. மேலும், 1994-95-ஆம் ஆண்டில் 10,000 மீனவ மகளிருக்கு 50 சதவிகித மானிய விலையில். 10,000 அலுமினியக் கூடைகள் வழங்க ரூ.10 இலட்சம் அரசு அனுமதித்து, அவை வழங்கப் பட்டுள்ளன.

இடைத்தரகர்கள் பிடியி லிருந்து ஏழை மீனவர்களைக் காப்பாற்ற ஏதுவாகவும், மீன வர்கள் பிடித்த மீன்களை அவர்களுக்கு இலாபகரமாக விற்பனை செய்து கொள்ளவும் பிரதம மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்குத் தொகை மூலதனம் அளிக்க அரசு 1991-92 முதல் முடிவெடுத்து 1991-92-இல் ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது. 1993-94-இல் ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டது.

**மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

கடலோர மீனவச் சங்கங்கள் 352, உள்நாட்டு மீனவச் சங் கங்கள் 278, இறால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் 5, மாவட்ட மீனவக் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியம் 10, மீன் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் 17, மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 111, அரை மில்லியன் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படகு கட்டும் கூட்டுறவுச் சங்கம் 1, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் 1, ஆக மொத்தம் 775 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

**உறுப்பினர்கள்**

கடலோர மீனவ உறுப் பினர்கள் 1,90,457 நபர்கள்

உள்நாட்டு மீனவ உறுப் பினர்கள் 77,425 நபர்கள்

மீனவ மகளிர் சங்கத்தின் உறுப்பினர்கள் 34,372 ஆக மொத்தம் 3,02,254 நபர்கள். சங்க உறுப்பினர்களாக உள்ளனர்.

இவ்வாறு மீன்வள மேம் பாட்டுக்கு, மீன்துறை முனைந்து செயலாற்றி வருவது குறிப்பிடத் தக்கது.



தமிழ்வளர்த்த பெரியார்

# நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

பேராசிரியர் டாக்டர் இ.சுந்தரமூர்த்தி
தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

இந்திய விடுதலை வேள்விப் பணியில் ஈடுபட்டு, தமிழ்ப் பணியையும் நாட்டுப் பணியையும் ஒருங்கே ஆற்றி உழைத்த தமிழ்ப் பெருமக்கள் பலராவர். அவர்களுள் 'அச்சமில்லை அச்சமில்லை' என்று ஆண்மைக் குரல் எழுப்பி சங்கநாதம் செய்தவரே பாட்டுக்கொரு புலவராம் பாரதியார். ஆனால், காந்தியின் சாந்தியைக் 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என அமைதிக் குரலால் -- அகிம்சைக் குரலால் இசைத்தவர் காந்தியக் கவிஞர் இராமலிங்கனார். இருவரும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு உழைத்தவர்கள். நாட்டுப்பற்றைக் கொண்டு மொழிப் பற்றையும், மொழிப்பற்றைக் கொண்டு நாட்டுப்பற்றையும் நன்கு வளர்த்த பெருமக்கள் எனப் பாராட்டுவர்.

பாரதிக்குப் பிறகு விடுதலைப் போர்க் கவிதைகள் தமிழுக்குக் கிடைக்க உழைத்தவர் இராமலிங்கர். பாரதியின் வழியிலேயே நின்று பாட்டைப் படைத்த காரணத்தைக் கவிஞரே பின்வருமாறு கூறுவார்:

"நாரதகீத மென்ன நயந்திகழ
பாடலாலே
பாரத நாட்டை என்று
பணிந்திடும் சுப்ரமணிய
பாரதிபாட்டைக் கண்ட பழைய
இத்தமிழர் நாட்டில்
யாரது என்று கேட்க யாதுருக்
கவிகள் சொன்னேன்"

என்று தம் கூற்றாலேயே தாம் பாரதி வழிவந்தவர் என்பதைச் சுட்டுவார்.

### காந்தியக் கவிஞர்

இராமலிங்கர் காந்தியக் கவிஞராய் விளங்கினார். அன்புநெறியில் உரிமை வாழ்வை வழங்கிய காந்தியடிகளாரின் அருள் நெறியைத் தம் கவிதைகளால் பரப்பினார். நாமக்கல் கவிஞர் காந்தியடிகளின் கொள்கைக்கு ஒரு குரலாக விளங்கினார். காந்தியத்தை இனிய கவிகளால் ஒலிக்கும் தமிழ்ச்சங்கு என்று பாராட்டினார் அறிஞர் தூரன்.

### புதியபார்வை

நாமக்கல்கவிஞர் கவிதை படைப்பதில் மட்டுமன்றி இலக்கியத் திறனாய்விலும் புகழ்பூத்து விளங்கினார். இவர் எழுதிய எழுபதிற்கும் மேற்பட்ட நூல்கள் இவருடைய புலமைத்திறனுக்குச் சான்றாய் ஒளிர்வன. இலக்கியங்களைப் புதிய பார்வையில் பார்த்தவர் இராமலிங்கர். இளங்கோவின் இன்பத் தமிழிலும், கம்பனின் கவிதை நயத்திலும் சங்கநூல்களின் இலக்கியச் சுவையிலும் இன்பங் கண்டவர் கவிஞர் என்பதை அவருடைய 'என் கதை' என்னும் நூல் காட்டும்.

### சிறை தந்த உரை

வேலூர்ச் சிறையில் இருந்த போது உருவான புதிய சிந்தனைதான் இவர் திருக்குறளுக்கு யாத்த புது உரை. வேலூர்ச் சிறையில் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்களும் இவரும் தமிழ் வகுப்பு நடத்தினார்கள். ஓமந்தூர் ரெட்டியார், கோபி செட்டிப்பாளையம் சுப்பண்ணக் கவுண்டர், முத்துக் கவுண்டர், நல்லாக் கவுண்டர், தேவாரம் பாரதி, ஆசிரியர் நாராயணசாமி ஆகியோர் திருக்குறளில் நாள்தோறும் ஓர் அதிகாரம் படித்து வந்தனராம்.

திருக்குறளைப் பரிமேலழகர் உரையைக் கொண்டு படித்து

வந்தபோது பலருக்கும் ஐயங்கள் ஏற்பட்டன. ஒரு நாள் திருக்குறள் வகுப்பிற்கு திரு. சத்தியமூர்த்தி அவர்களும வருகை தந்தார் 'குன்றேறி யானைப் போர் கண்டற்றால்' என்னும் குறளுக்கு விளக்கம் தந்து கொண்டிருந்தார், கவிஞர். அதற்கு அமைந்த பரிமேலழகர் உரையைக் கேட்ட அனைவரும் மற்றும் திரு சத்தியமூர்த்தி அவர்களும் இதன் உரை பொருந்தாதிருப்பது குறித்து வினவினராம். இறுதியில் கவிஞரையே ஓமந்தூர் ரெட்டியார் ஒரு புதிய உரை எழுத வேண்டும் எனப் பணித்தாராம். அதற்குப் பின் உருவாகியதே அவருடைய திருக்குறள் புதிய உரையாகும். அவருடைய தன் வரலாற்றில் அது குறித்துப் பின்வருமாறு கூறுவார்:

"தப்போ தவறோ திருக்குறளுக்கு
வேறு உரை
எளிய நடையாகவாவது
எழுதிவிடுவது' என்ற
தீர்மானத்தை அன்றைக்கே
செய்துகொண்டேன்
அதற்குப்பின் எந்நேரமும் அதே
சிந்தனைதான்
ஒரே குறளைத் திருப்பித் திருப்பி
வெவ்வேறு
விதமாகப் பதம்பிரித்துப்
பார்த்துக் கொணடே
சிறசில இரவுகள் தூங்காமலேயே
விடிந்து போகும்"

என்று கூறுவதால் அவருக்கிருந்த குறளார்வம் புலனாகும். 1922-இல் வேலூர்ச் சிறையில் உருவான இச்சிந்தனை 1954-இல் கோவையில் நூல் வடிவம் கொண்டது. திருக்குறளைக் கவிஞர் காந்திய நெறியாகவே கொண்டார். அவருடைய வள்ளுவ விளக்கங்கள் காந்திய விளக்கங்களாகவே விளங்கின.

அண்ணல் காந்தியடிகளை நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் எனவே போற்றுகின்றார்.

'வள்ளுவரின் வாழ்க்கை தனை
நினைப்பு மூட்டி
வான்புகழும திருக்குறளை
நடந்துகாட்டும்
கள்ளமிலாக் காந்தி முனி'

எனப் பாராட்டுவார்.

'தெள்ளியநல் அறங்களையே
தெளிவாய்ச் சொல்லித
தினையளவும் பிசகாமல் நடந்து
காட்ட
வள்ளுவனே மறுபடியும வநதான்
என்ன
வழிகாட்டித் திருக்குறளை
வாழ்த்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன்
பெம்மான் காந்தி'

என்று பாடும் அவர்தம் பாடல் தேசத்தந்தையே திருவள்ளுவர் என்று காட்டும். வள்ளுவத்தில் வையத்தை அளந்து காண விழையும் கவிஞர் இந்திய ஒருமைக்கும் இணைப்புப் பாலமாகத் திருவள்ளுவ நெறியையும் காந்தியையும் காணுகின்றார் போலும்- 'திருக்குறள் அறிவெலாம் ஒன்றாய்த் திரண்டுள நெறியனவாம் உருக்குறள் காந்திமகான்' எனப் போற்றுவார். அறிவும், காந்திய அடிப்படையில் தோன்றும் சமுதாய உணர்வும் சேர்ந்து அமைந்த மிகவும் புதிய கோணத்திலிருந்து நாமக்கல் கவிஞர் வள்ளுவரைக் காண்கிறார் என்பா.

> **நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, அது எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன் படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். அது எல்லாப் பொருள்களையும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவது.**
>
> **-மொழிஞாயிறு**
> **ஞா. தேவநேயப்பாவாணர்**

### திறனாய்வுப் பண்பு

கவிஞர் எழுதிய 'திருவள்ளுவர் திடுக்கிடுவார்', 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்', 'வள்ளுவரின் உள்ளம்' ஆகிய மூன்று நூல்களும் திருக்குறள் பற்றிய ஆய்வு நூல்களானாலும் இவை வள்ளுவரின் குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் வழங்கிய உரைகளின் மறுப்புகளாவே விளங்குகின்றன. பழைய உரையாசிரியர்களைப் பற்றிய இவருடைய மதிப்பீடு கவிஞரின் நுண்மாண் நுழைபுலத்தையும் ஆய்வு நெறியையும் காட்டும். பரிமேலழகர் கருத்துக்கு மறுப்புரைகள் எழுதியிருந்தாலும் அவரைப் பற்றி நடுவுநிலைமையோடு கவிஞர் கூறும் கருத்துகள் கவிஞரின் ஆய்வு நாகரிகத்தைக் காட்டுவன.

'பரிமேலழகர் உரை மற்றெல்லா உரைகளிலும் மிகச் சிறந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை ... ஆனாலும் என்ன? பரிமேலழகரும் அவருக்கு முன்னாலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைச் சொந்தமாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்து விட்டார் என்பதை எடுத்துச் சொல்லக் கூடாதா?' என்று கேட்கும்போது கவிஞரின் திருக்குறள் பற்றையும் நடுநிலைத் திறனாய்வுப் பண்பையும் ஒருங்கே கண்டு மகிழ முடிகிறது.

# நேருவின் பொன் மொழிகள்



- சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி', 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும் வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயற்சிப்பது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் முயலத்தான் வேண்டும்.

- மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாகக் கைத்திறனையும் மூளைத் திறனையும் பெருக்கா விட்டால், ஆற்றலும் வளராமல் சுருங்கி விடும்.


- உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்து விடும்.

- விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்ததுமட்டுமின்றி, இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரிக்கிறது.

- ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும், நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி, கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில், அது அழகுப் பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின; அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.

### காந்தி தூவிய விதை

காந்திய நெறியைப் பின்பற்றி வாழ்ந்த கவிஞர் எல்லாத் துறைகளிலும் புகழ்பெற்று வாழ்ந்தவர். எழுத்தாளர், பேச்சாளர், அரசியலாளர், ஓவியக்கலைஞர், இசைக் கலைஞர், புதினக்கலைஞர், திறனாய்வாளர் எனப் பல்வேறு நிலைகளிலும் தன் முத்திரையைப் பதித்தவர். காந்திய அணுகுமுறையை எல்லாத் துறைகளிலும் பின்பற்றினார். எனவேதான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள், பாரதியையும், நாமக்கல்கவிஞரையும் பாராட்டும்போது 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' எனப் போற்றி மகிழ்ந்தார்.



# குடும்பத்திற்கு ஒரு வீடு!

தமிழக அரசின் "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற கொள்கையினை, கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் தலைமை நிறுவனம்தான், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம். இது 18.3.1959-இல் பதிவு செய்யப்பட்டு, 15.7.1959 முதல் செயல்பட்டு வருகிறது.

**தமிழகம் முழுவதிலும் இணையத்தின் பணிகள்:**

தமிழகம் முழுவதிலும் உள்ள 638 முதன்மைச் சங்கங்களின் மூலம் புதுவீடு கட்டுவதற்கும்/ மாநகராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடிவீடு வாங்கவும் (Purchase of flat), புதுவீடு வாங்கவும் (Purchase of new house) உயர்ந்தபட்சம் ரூ. 4 இலட்சம் வரை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடன் வழங்கி வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களும், பேரூர்களும், சிற்றூர்களும் முதன்மைச் சங்கங்களின் செயல் எல்லையில் (Area of Operation) இணைக்கப்பட்டுள்ளன.

471 நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் நகர்ப்புறப் பகுதிகளிலும், 167 வட்ட வீட்டுவசதிச் சங்கங்கள் கிராமப்புறங்களிலும் செயல் பட்டு வருகின்றன. தமிழகத்தில் எந்த மூலை முடுக்கில் இருக்கும் தனிநபரும், ஏதாவது ஒரு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து வீடுகட்ட இயலும்.

இணையம், தமிழக அரசின் உத்தரவாதத்தின்பேரில், ஆயுள் காப்புறுதிக் கழகம், அட்கோ, எச்.டி.எப்.சி., தேசிய வீட்டுவசதி வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று முதன்மைச் சங்கங்களின் மூலமாக வீடு கட்ட விரும்புபவர்களுக்குக் கடன் வழங்கி வருகிறது.

கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.95 முடிய 5,59,814 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ. 377 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.95 முடிய 1,85,189 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ. '847 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**—கே. என். நஞ்சுண்டன்**
**சிறப்பு அலுவலர்/**
**மேலாண் இயக்குநர்**

**இந்தியாவிலேயே முதலிடம்**

இணையம், கடந்த $4^1/_2$ ஆண்டுகளில் ரூ 646 கோடி கடன் வழங்கி இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இது தேசிய அளவில் மாபெரும் சாதனையாகும். இணையம் 1910 முதல் 1991 வரையிலான 80 ஆண்டுக்காலத்தில் ரூ 578 கோடி கடனாக வழங்கியது. இணையம் தனது 80 ஆண்டுக்காலத்தில் வழங்கிய கடன் ரூ.578 கோடியையிடக் கடந்த நாலரை ஆண்டுகளில் ரூ. 646 கோடி கடன் வழங்கி இமாலயச் சாதனை புரிந்துள்ளது.

நாட்டிலேயே கூட்டுறவுத் துறை மூலம் ரூ. 1224 கோடிக்கு மேல் கடன் வழங்கிய இணையம் நமது இணையம் மட்டுமே. நாடு முழுவதிலும் கூட்டுறவுத்துறை மூலம் கட்டப்பட்ட 14 இலட்சம் வீடுகளில் 7 இலட்சம் வீடுகள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் வழங்கிய கடன் தொகை மூலம் கட்டப்பட்டவையாகும்.

**கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடனுதவி**

இத்திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய வீடுகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 3,080 வழங்கப்படுகிறது. இதன்படி ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப் படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற் படுத்திக் கொடுத்தல் போன்ற



**1994-95-ஆம் ஆண்டு இந்திய அளவில் திறமையாக நிர்வகிக்கப்படும் இணையம் என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தை, புது டெல்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தேர்வு செய்தது. அதற்கான தேசிய விருது 13.10.95 அன்று புது டெல்லியில் வழங்கப்பட்டது. இவ்விருதை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடம் காண்பித்து மகிழ்கின்றார். இணையத்தின் சிறப்பு அலுவலர் திரு. கே.என். நஞ்சுண்டன் உடன் இருக்கிறார்.**

வற்றிக்குக் கடன் உதவி வழங்கப் படுகிறது.

நடப்பு ஆண்டில் மேற்படித் திட்டத்தின் கீழ் **30,000** வீடுகள் மேம்படுத்த ரூ. **7.74** கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வெள்ளத்தால் முழுமையாகப் பழுதடைந்த வீடுகளைக் கட்டிக்கொள்ள கடனுதவி.

**1992** மற்றும் **1993**-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் முழுமையாக வீடு இழந்த, பொருளாதாரத்தில் நலிவுற்ற **18,000** உறுப்பினர்களுக்கு ரூ. 27 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டிக் கொள்ளக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், இவ்வாண்டு டிசம்பர் திங்களுக்குள் நிறைவடையும்.

### வெள்ளத்தால் பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்கக் கடனுதவி.

*1992* மற்றும் *1993*-ஆம் ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பெருமளவில் இடிந்துபோன செங்கற்களால் கட்டப்பட்டு ஓலை வேயப்பட்ட வீடுகள் மீண்டும் கட்டிக் கொள்ள ஏதுவாக ரூ. *3.44* கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் கடன் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மலைப் பிரதேசத்தில் வீடுகளைப் பழுதுபார்க்கக் கடன் உதவி

கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நீலகிரி, ஏர்க்காடு மற்றும் கொடைக்கானல் ஆகிய மலைப் பிரதேசங்களில் இயங்கி வரும் வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுகளைப் பழுதுபார்க்க நடப்பு ஆண்டில் ரூ. 2.07 கோடி கடன் வழங்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டக் கடன் உதவி:**

அம்பாசமுத்திரம் வட்டச் சங்கம் மூலம் முக்கூடல் கிராமத்திலும், பாளையங்கோட்டை வட்டச் சங்கம் மூலம் மேலப் பாளையம் கிராமத்திலும் வசிக்கின்ற பீடித் தொழிலாளர்களுக்கு நடப்பு ஆண்டில் ரூ. 2.05 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழக அரசின் உதவி:**

இவ்விணையம் தொடங்கிய போது ரூ.5 இலட்சத்தைத் தமிழக அரசு பங்கு மூலதனமாக அனுமதித்தது. தொடர்ந்து ரூ.4.85 கோடி வரை முதலீடு செய்த அரசுப்பங்குத் தொகையில் தற்போது ரூ. 2,80 கோடி நிலுவையாக உள்ளது. பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து பெறுகின்ற கடனுக்கு அரசு அளிக்கும் உத்தரவாதத்திற்கு எந்தவிதமான தொகையும் (Guarantee Commission) இணையத்திலிருந்து வசூலிக்கவில்லை. அத்துடன் அடமானச் சொத்துக்கள் ஆதாரத்தின் பேரில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு எழுதித் தரும் அடமானம் பத்திரத்திற்கு முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவற்றிற்கும் அரசு விலக்களித்துள்ளது. உறுப்பினர்கள் முதன்மைச் சங்கங்களுக்கு எழுதித்தரும் அடமானப் பத்திரத்திற்கும் முத்திரைக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை. கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 'அட்கோ' நிறுவனத்திடமிருந்து கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக

> **முதல் கிராமக் கூட்டுறவுச் சங்கம்**
>
> **தமிழ்நாட்டில், ஏன், இந்தியாவிலேயே, செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டத்தில், திரூர் கிராமத்தில் தான் முதலாவதாகக் கூட்டுறவு சங்கம் எண் 1 என 30-8-1904-இல் பதிவு செய்யப் பட்டது.**

இணையத்திற்கு வட்டியில்லாக் கடன் அரசு வழங்கி வருகிறது.

வீட்டு வசதித் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதில், இந்தியாவிலுள்ள 23 இணையங்களில் இவ்விணையம் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

இந்திய அளவில் வீட்டு வசதித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் வீட்டுவசதி நிறுவனங்களுக்கு "அட்கோ நிறுவனம்" ஆண்டு தோறும் விருதுகள் வழங்கிப் பாராட்டி வருகிறது. இவ்வகையில் தொடர்ந்து முதல் இடத்தை வகிக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு "அட்கோ நிறுவனம் 1992-93 மற்றும் 1993-94 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த இணையம் தொடங்கியதிலிருந்து சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் 1993-94-ஆம் ஆண்டிற்கு அதிகப் பட்சம் 16 சதவீதமும் ஈவுத்தொகை வழங்கியுள்ளது.

தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் இணையம் 1992-93-ஆம் ஆண்டு ரூ. 10.76 கோடியும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ. 12.30 கோடியும் இலாபம் ஈட்டியுள்ளது. இத்துடன் ஆசியாவிலேயே சிறந்த விளையாட்டு அரங்கமான நேரு விளையாட்டு அரங்கின் கட்டுமானப் பணிக்கு இணையம் மற்றும் முதன்மைச் சங்கங்களின் சார்பில் ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக ரூ. 4.17 இலட்சமும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு ரூ.10 இலட்சமும் இணையம் வழங்கியுள்ளது. 1990-91 முதல் வழங்கப்படும் கடன் தொகைக்குக் கடன் பெற்ற உறுப்பினர் மாதந்தோறும் கட்டவேண்டிய தவணைத் தொகையில் பாதித் தொகையைச் செலுத்தினால் போதும். மீதிப் பாதியை அரசே ஏற்கும்.

**இணையத்திற்குத் தேசிய விருது**

அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் நூற்றாண்டு விழா மான்செஸ்டர் நகரில் 20.9.95 முதல் 23.9.95 வரை நடைபெற்றது. மாண்புமிகு தமிழக வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்களையும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் சிறப்பு அலுவலர் திரு கே.என். நஞ்சுண்டன் அவர்களையும், இந்தியாவிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் சார்பில் இவ்விழாவில் கலந்துகொள்ள புதுடெல்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தது.

## ரூ. 15 கோடி நிதி ஒதுக்கீடு: அரசு மருத்துவமனைகளில் அவசிய மருந்துகள் அனைத்தும் கிடைக்க முதல்வர் ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவ மனைகளிலும், குறிப்பாக கிராமப்புறங் களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) போன்றவைகளில் உயிர்காக்கும் மருந்து வகைகள் உட்படப் பல்வேறு நோய்களுக் கான அனைத்து மருந்துகளும் தேவையான அளவுக்கு எப் போதும் இருப்பில் வைக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில், அரசு மருத்துவமனைகளின் மருந் துகள் இருப்பினை ஒருங் கிணைந்த முறையில் கண் காணித்து கொள்முதல், விநியோகம் மற்றும் இருப்பு ஆகிய பணிகளைச் செம்மையாக மேற்கொள்வதற் காகத் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழக (Tamil Nadu Medical Services Corporation) என்ற அமைப்பு 56 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப் பட்டு, அந்தக் கழகம் தற்போது சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் குறைந்தபட்சம் 6 மாதங் களுக்குத் தேவையான அவசிய மருந்துகளும், பொருட்களும் இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 15 கோடி ரூபாய் நிதி, தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்திற்குத் தேவைப்பட்ட அளவுக்கு மருந்துகளை வாங்கிக் கொள்வதற்காக ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

1994-95-ஆம் ஆண்டு இந்திய அளவில் திறமையாக நிர்வகிக்கப்படும் இணையம் என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தேசியக் கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தால் தேர்வு செய்யப்பட்டது. அதற்கான தேசிய விருது 13.10.95 அன்று புது டெல்லியில் வழங்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு முதல் இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படும் ஒரு கிராமிய வீட்டு வசதிச் சங்கத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு 'மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர், புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா விருது' என்னும் தேசிய விருதை ஆண்டுதோறும் வழங்கத் தேசிய கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவிலேயே சிறந்த கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமாக, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாலக் கோடு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்" தேர்ந்தெடுக்கப் பட்டு, அதற்குப் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா விருது வழங்கப்பட்டது. இவ் விருதினையும், தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையத் தால் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு வழங்கப் பட்ட சிறப்பு விருதினையும் மத்திய அரசின் மாண்புமிகு வீட்டுவசதித் துறை இணை அமைச்சர் மாண்புமிகு எஸ்.எஸ் அலுவாலியா அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி அவர்களிடம் வழங்கினார்.

**1995-96-ஆம் ஆண்டில் வழங்க உள்ள கடன்:**

நடப்பு ஆண்டில் நகர்ப்புற மற்றும் கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டி முடிக்கவும், பழுது பார்க்கவும், மேம்படுத்தவும் ரூ. 252 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், கடந்த 36 ஆண்டுகளில் சீராக வளர்ச்சிப் பெற்று தமிழக மக்களின் வீட்டுவசதித் தேவையைத் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. முதன்மைச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதிலும், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் தொகை பெறுவதிலும், பங்குத் தொகை வசூலிப்பதிலும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் அகில இந்திய அளவில் இணையம் முதலிடம் வகிக்கிறது. ●

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

**திரு.பா. இராமகிருஷ்ண பரமஹம்சர்**
**கூடுதல் இயக்குநர்**
**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை விரிவுபடுத்தி நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன் 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற கைத்தொழில் கலைஞர்களுக்கு அவரவர் இருப்பிடங்களிலேயே தமிழ்நாடு முழுவதிலும் நிறுவப் பட்டுள்ள கதர் கிராமத்தொழில் வாரிய அலகுகள் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது வாரியத்தின் தலையாய நோக்கமாகும்.

மத்திய அரசின், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில் 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர்த் தொழிலையும், தனது நேரடி அலகுகள், தன் கீழ் செயல்படும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் கைத்தொழில் கைவினைஞர்கள் மூலமாகவும் செயல்படுத்தி வருகிறது. அவ் வகையில், கதர்த்திட்டங்களையும் உண்ணா எண்ணெயிலிருந்து குளியல் மற்றும் சலவைச் சோப்பு செய்யும் தொழிலையும் வாரியம் தனது நேரடி அலகுகள் மூலம் மட்டுமே செயல்படுத்தி வருகிறது. இதரக் கிராமக் கைத் தொழில்களான மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தி, தச்சுக் கருமார் தொழில், பருப்பு மற்றும் நவதானியப் பொருட்கள் தயாரித்துப் பதப்படுத்துதல், சுண்ணாம்பு, கிளிஞ்சல் தயாரித்தல், தோல் பொருட்கள் தயாரித்தல், தேன் சேகரித்தல், கைமுறை காகிதம் தயாரித்தல், அலுமினிய வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரித்தல் போன்ற கிராம கைத் தொழில்கள் வாரியத்தின் நேரடி அலகுகள் மூலமாகவும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் தொழில் கைவினைஞர்கள் மூலமாகவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டங்களைச் செயல்படுத்தி, தொழிலை மேம்படுத்தி, வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி, வருவாய் ஈட்டும் வகையில் தொழிற் கூட்டுறவுச் சங்கங் களுக்கும், தனி நபர் கைவினை ஞர்களுக்கும் 4 சதமான குறைந்த வட்டியில் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிலிருந்துக் கடன் மற்றும் மான்யம் பெற்று வினியோகிக்கிறது. அத்துடன், அரசு சிறப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர்ச்சி மேம்பாட்டுத்திட்டம், சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் பகுதி - 2 ஆகியவற்றையும் அரசு வழங்கும் தொகையினைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் 1,289 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டு முடிய வுள்ள காலத்தில் 79,734 தனி நபர் கைவினைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் வாரியத்தின் நேரடி அலகுகள், வாரிய நிர்வாகத்தின் கீழ் செயல்படும் தொழிற்ச் சங்கங்கள் மற்றும் நிதியுதவி பெற்ற கைவினைஞர்கள் அனைவர்களாலும் ரூ.38,446.94

இலட்சம் மதிப்புள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப் பட்டு, ரூ.41,583.32 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு முடியவுள்ள காலத்தில் 14,31,754 நபர்களுக்கு வேலை வாய்ப் பளிக்கப்பட்டுள்ளது. அதில் 5,26,570 பேர் பெண்கள் 2,99,795 பேர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 15,970 பேர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள், அனைவருமாக 1994-95-ஆம் ஆண்டில் ரூ.19,744.15 இலட்சம் கூலியாக வருமானம் ஈட்டியுள்ளனர்.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் 2-வது இடத்தையும், கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் 3வது இடத்தையும், கிராமத்தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பளிப்பதில் முதல் இடத்தையும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1992-93-இல் வகித்துள்ளது. மேலும், வாரியக்கூட்டமைப்புத் திட்டங் களைச் செம்மையாக நிறை வேற்றும் பணியில் இந்தியா விலேயே வேறு எந்த மாநிலத் தையும விட முன்னிலை வகித்து, மத்திய அரசின் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள எ கிரேடு என்னும் சிறப்பைத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மட்டுமே பெற்றுள்ளது.

வாரியத்தின் நேரடி அலகுகள் தவிர ஆங்காங்கே கிடைக்கும் மூலப் பொருட் களைக் கொண்டு கிராமக் கைவினைஞர்களின் இருப்பிடங் களுக்கு அருகிலேயே கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அனுமதித்துள்ள கைத்தொழில் களுக்கு, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களையும் பதிவு செய்து அத்தொழிலின் வளர்ச்சிக்கு வாரியம் நிதி உதவி, தொழில் நுட்ப உதவி மற்றும் நிர்வாக உதவி ஆகியவற்றை அளிக்கிறது. அவ்வகைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தும், கதர் கிராமத் தொழில்களைப் பொருத்த வரையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலருக்கு அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அப் பணியில் அவருக்கு உதவியாக வாரியத்தின் தலைமை அலுவல கத்தில் தொழிற் கூட்டுறவு உதவி இயக்குநர் ஒருவர் மற்றும் இணை இயக்குநர் (மானிடரிங் செல்) ஆகியோருடன், பிற பணிகளுடன் தொழிற் கூட்டுறவு சம்பந்தப்பட்ட நடவடிக்கை களையும் நிர்வகித்து வரும் கூடுதல் இயக்குநர் செயல்பட்டு வருகின்றனர்.

**மரத்தை வெட்டுகின்றவன், அது இதுவரை கொடுத்து வந்த நிழலையும் சேர்த்து வெட்டு கிறான் என்பதை மனதில் வையுங்கள். –சீனப் பழமொழி**

தமிழ்நாடு முழுவதும் வேலூர், திருச்சி, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டலத்துணை இயக்குநரால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. தொழிற் கூட்டுறவைப் பொருத்த வரையில், மண்டலத் துணை இயக்குநர்களுக்கு கூட்டுறவுத் துறையின் இணைப் பதிவாளருக்குண்டான அதிகார மனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று மாவட்டங்களைப் பொருத்த வரையில், தொழிற் கூட்டுறவு உட்பட அனைத்துக் கதர் கிராமத் தொழில் திட்டங்களையும் செயல்படுத்த 30 உதவி இயக்குநர்கள் செயல் பட்டு வருகின்றனர். தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பொருத்த வரையில் கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளருக் குண்டான அதிகாரங்கள் அனைத்தும் உதவி இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற குறிக்கோளுடன் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்து, அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. அக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராமக் கைவினைஞர்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிடர், பழங் குடியினர் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதுடன், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழி வகைகளும் செய்யப்படுகின்றன. 31.3.95-இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கீழே குறிப்பிட்டுள்ள படி செயற்பட்டு வருகின்றன.

மட்பாண்டம் இயங்கும் சங்கங்கள் 119 இதேபோல, நார் மற்றும் பாய் 78, தச்சு மற்றும் கருமார் 103, எண்ணெய் 41, தோல் 64, கைக்குத்தலரிசி,

## உள்ளத் தூய்மை.

உள்ளத் தூய்மையுடன் கடமைகளைச் செய்கிறவனே உண்மையான மனிதன், தொண்டன், தலைவன் எல்லாம்.

—விநோபா

## ஊக்கமுள்ள மனிதன்.

ஊக்கமுள்ள மனிதன், அங்கும் இங்கும் நிற்காமல் தன் கடமைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பான்.

—எமர்சன்

## அன்பே உலகம்!

இந்த உலகமே அன்பினாலும், சமாதானத்தினாலும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

—ஏலன் போல்

பருப்பு நவதானியம் 33, பிரம்பு மற்றும் மூங்கில் 35, சுண்ணாம்பு 42, பல்வகைத் தொழில் 38, தேன் சேகரிப்பு 18, பனை ஓலைப் பொருட்கள் 27, கைமுறைக் காகிதம் 7, அகர்பத்தி 4, அலுமினியப் பொருட்கள் 14, பழப்பக்குவப்படுத்துதல் 5, மின்னணுச் சாதனங்கள் தயாரிப்பு 13, முந்திரிப்பருப்பு பக்குவப்படுத்துதல் 2, கடுக்காய்ச் சேகரிப்பு 1, மாலை தயாரித்தல் 1, கொம்பு மற்றும் எலும்புப்பொருட்கள் 1, எழுது பொருட்கள் 18, பாலிதீன் கவர் 1, செயற்கை வைரக்கல் பட்டைத்தீட்டுதல் 18, ஆயுர்வேத மருந்துத் தயாரிப்பு 1, குண்டூசி தயாரித்தல் 1, மெழுகுவர்த்தித் தயாரிப்பு 1, கதர்த்துணி 12, கதர்ப்பட்டு 3, கதர்த்துணி தைத்தல் 3, கம்பளி 3, பனைத்தொழில் 1173. மொத்தம் 1880.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 1880 கூட்டுறவுச்சங்கங்களில் 2 மாநில அளவிலும், 7 மாவட்ட அளவிலும் மீதமுள்ள 1,871 ஆரம்பச் சங்கங்களாகவும் உள்ளன.

அனைத்துக்கூட்டுறவுச் சங்களிலுமாக 5,12,890 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 72,916 பேர் பெண்கள் மற்றும் 52,442 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பங்குத் தொகையாக ரூ.248.63 இலட்சம் செலுத்தியுள்ளனர்.

1994-95-ஆம் ஆண்டில் அச்சகங்கள் ரூ.17,242.46 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்துள்ளன. ரூ.19,045.27 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளன. அதன் மூலம் 31.3.95 முடியவுள்ள காலத்தில் 9,43,783 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், ரூ.10,635.88 இலட்சம் வருவாயும் அளித்துள்ளன.

இதுவரை தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வந்த பனைத் தொழில், அத்தொழில் சம்பந்தப் பட்ட திட்டங்களை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தும் எண்ணத்துடன் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வாரியம் என்ற அமைப்பை ஏற்படுத்து வதற்குத் தேவையான சட்டத்தை தமிழ்நாடு அரசு நிறைவேற்றி, அதனைச் செயல்படுத்துவதற்கு முதுநிலை இந்திய ஆட்சி பணியாளர் ஒருவரை தமிழ் நாட்டிலுள்ள பனைத்தொழிலை பொறுத்த மட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் என்று நியமித்துள்ளது. அவ்வகைக்குத் தலைவர் மற்றும் உறுப்பினர் களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாரியம் 6.1.95 முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறாக, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கைவினைஞர்களை ஊக்கு வித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த் துவதற்குத் தமிழ்நாடு கதர்க் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தனிச் சிறப்பான பங்கு வகிக்கின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556.9


பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23